1 ... யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 04 புதன்கிழமை (20.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 245

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL

CALL :- 222 5908/222 8812

## இடம்பெயர்ந்தவர்களின் நலனுக்கான சட்டமூலம்

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான பாதுகாப்புக் குறித்த சட்டமூலம் ஒன்றினை வரைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அதனை சட்டமாக்குவதற்காக உரிய அமைச்சரிடம் கையளித்துள்ளது.

இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்து அதனை ஒரு சட்டமூலமாக்குவதற்கான முயற்சிகளில் மனித உரிமைகள் ஆணையகம் ஈடுபட்டிருக்கின்றது.

பல வருடங்களாகத் தொடரும் உள்நாட்டு யுத்தம் மற்றும் சுனாமித் தாக்கம், இயற்கை அனர்த்தங்கள், பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றினால் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கின்றார்கள். (10 ஆம் பக்கம் பார்க்க)

## டீசல் பற்றாக்குறையினால் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)


வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடம் போதியளவு டீசல் கையிருப்பில் இல்லாததால் மட்டுப்படுத்தப்பட்ட சேவையை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட ரயர்கள் இல்லாததால் பல பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த முடியவில்லை எனவும் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை மேற்கொள்ளப்படுவதனால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அரச ஊழியர்களும் க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதா (10 ஆம் பக்கம் பார்க்க)

# வட பகுதி வைத்தியசாலைகளில் படையினருக்கென விசேட பிரிவு

## சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

வட பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் படை நடவடிக்கைகளில் காயத்துக்குள்ளாகும் படையினருக்குச் சிகிச்சையளிப்பதற்காக வடக்கிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் தனிப் பிரிவொன்றை ஏற்படுத்துமாறு சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாணவர்கள் வவு.சென்றடைந்தனர்

(வவுனியா)

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகச் சென்ற 117 யாழ்ப்பாண மாணவர்கள் நேற்று வவுனியாவைச் சென்றடைந்தனர்.

திருகோணமலையைச் சென்றடைந்த இம் மாணவர்களை வட மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் பொறுப்பேற்று நேற்று வவுனியாவுக்கு அழைத்துச் சென்றனர்.

இவர்களுக்கான போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளதாக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களைக் காக்குமாறு கோரி பல்கலைக்கழகத்தில் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதியில் இடம்பெறும் மோதல்களால் இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் துயர் துடைப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் எனக் கோரி யாழ்.பல்கலைக்கழகத்தில் மௌனப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவரும் நேற்றுக் காலை 10 மணிக்கு பல்கலைக்கழக மண்டபத்தில் ஒன்று கூடி சுமார் 15 நிமிட நேரம் மௌனமான பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

வன்னியில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்திருக்கும் மக்களுக்கான உதவிகளை வழங்க சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வர வேண்டும் எனக் கோரியே இந்த மௌனப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

வன்னிப் பெரு நிலப்பரப்பைக் கைப்பற்றும் நோக்கோடு இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் மோதல்கள் காரணமாகப் போர் நடவடிக்கைகளுடன் தொடர்பில்லாதவர்கள் பாதிக்கப்படுவது வேதனைக்குரியது.

நிச்சயமற்ற இருப்பு நிலையோடும் மிரட்சியும் அச்சமும் கலந்த வாழ்வோடும் வறுமையோடும் போராடும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரங்கள் இன்றுடன் முடிவு

(கொழும்பு)

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் இன்று நள்ளிரவுடன் முடிவடையும் என தேர்தல் பிரதி ஆணையாளர் டபிள்யு. பி.சுமனசிறி தெரிவித்தார்.

வட மத்திய மாகாணத்திற்கு 32 உறுப்பினர்களையும் சப்ரகமுவ மாகாணத்திற்கு 42 உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தல் வன்முறைகள் அதிகம் இடம்பெறும் பகுதிகளில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மறைவிடம் மீது எந்த நேரத்திலும் தாக்குதலாம்

### விமானப் படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு தருணத்திலும் புலிகளின் தலைவர் பிரபாகரன் பதுங்கியுள்ள முக்கிய தளத்தின் மீது விமானப் படையினர் தாக்குதல் நடத்தக் கூடும் என விமானப் படைத் தளபதி எயார் மார்சல் றொசான் குணதிலக தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்திற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். விமானப் படைத் தளபதி மேலும் கூறியுள்ளதாவது,

தரைப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இத் தாக்குதல்கள் காரணமாக சிவிலியன்களுக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் போராட்டத்தில் பெருமளவானோர் இணைவு

### வன்னித் தகவல்கள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் அவசர வேண்டுகோளையடுத்து விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து விலகியிருந்த முன்னாள் போராளிகள் மீண்டும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து வருவதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னியை முற்று முழுதாக ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் இலங்கை அரசாங்கம் போரைத் தீவிரப்படுத்தியுள்ளது. அதன் அனைத்து வளங்களையும் பயன்படுத்தித் தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

எனவே இந் நடவடிக்கையை எதிர்கொள்ள விடுதலைப் புலிகளோடு இணைந்துள்ள ஆயிரம் ஆயிரம் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுசந்திகா ஜெயசிங்க அரையிறுதிக்கு முன்னேறினார்

பீஜிங் ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் இலங்கை வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க அரையிறுதிக்கு முன்னேறினார்.

நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தின் தெரிவுப் போட்டியில் முதலாவது சுற்றில் 23.04 வினாடிகளில் தூரத்தை ஓடி முடித்த சுசந்திகா ஜெயசிங்க இரண்டாம் இடத்தை எடுத்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இரண்டாவது சுற்றில் தூரத்தை 22.94 வினாடிகளில் முடித்த சுசந்திகா ஜெயசிங்க 3-வது இடத்தைப் பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானார்.

இப்பிரிவில் தூரத்தை 22.76 வினாடிகளில் கடந்த பகறீனின் ஹாஸ்ரா றோக்கா முதலாவது இடத்தையும் பிரான்ஸின் ஹவாரி முரீஸ் தூரத்தை 22.8 வினாடிகளில் ஓடி முடித்தனர்.

இதேவேளை பெண்கள் 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் நேற்று நடைபெற்ற தெரிவுப் போட்டியில் ஜமேக்காவின் கிரோன் சிம்சன் தூரத்தை 22.60 வினாடியில் ஓடி முடித்து முதலிடத்தைப் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்காவுக்கு தங்கம்

படகு போட்டியில் லேசர் ரேடியல் பிரிவில் அமெரிக்கா தங்கம் வென்றுள்ளது. வெள்ளி பதக்கத்தை கனடாவும் வெண்கலப் பதக்கத்தை நியூசிலாந்தும் வென்றுள்ளது.

## ஜிம்னாஸ்டிக்கில் சீனாவுக்கு தங்கம்

பீஜிங் ஒலிம்பிக்கில் நடந்த ஆண்களுக்கான ஜிம்னாஸ்டிக் (ஆர்டிஸ்டிக்பேரலெல் பார்ஸ்) பிரிவில் சீனாவின் ஜியாபொங் லீ தங்கம் வென்றார்.

இவரைத் தொடர்ந்து கொரியாவின் வோன்சுல் யூ வெள்ளிப் பதக்கமும், உஸ்பெகிஸ்தானின் அன்டோன் போகின் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

## மல்யுத்தத்தில் ரஷ்ய வீரருக்கு தங்கம்

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த ஆண்களுக்கான 60 கிலோ பிரிஸ்டைல் மல்யுத்தப் போட்டியில் ரஷ்யாவின் மவ்லெட் படிரோவ் தங்கம் வென்றார்.

இவரைத் தொடர்ந்து உக்ரைனின் பெடோரிசின் வெள்ளிப் பதக்கமும், ஈரானின் முகமதி மற்றும் ஜப்பானின் யு மோடோ வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

## ஆர்ஜென்டினா வீரர்கள் தங்கம் வென்றனர்

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த ஆண்களுக்கான சைக்கிளிங் (டிரக்) மடிசன் போட்டியில் ஆர்ஜென்டினாவின் குருசெட், பிரிசு தங்கம் வென்றனர்.

இவர்களைத் தொடர்ந்து ஸ்பெயின் வீரர்கள் வெள்ளிப் பதக்கமும் ரஷ்ய வீரர்கள் வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

## ஜேர்மனி வீரர் பிரோடெனோ டிரையத்லானில் தங்கம் வென்றார்



நீச்சல், சைக்கிள் பந்தயம் மற்றும் ஓட்டப் பந்தயப் போட்டிகளை உள்ளடக்கிய டிரையத்லானில் ஜேர்மனியின் ஜேன் பிரோடெனோ ஒரு மணிநேரம் 48 நிமிடம் 53.28 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து தங்கம் வென்றார்.

சிட்னி ஒலிம்பிக்கில் (2000) தங்கம் கைப்பற்றிய கனடாவைச் சேர்ந்த சைமன் விட்பீல்ட் இரண்டாவதாக வந்து வெள்ளியும் நியூசிலாந்தின் டோசெட்ரி வெண்கலமும் பெற்றனர்.

கடந்த ஆண்டு நடந்த உலக சம்பியன்சிப் போட்டியில் ஆறாவது இடமே பெற்று ஏமாற்றமளித்த ஜேர்மனியின் ஜேன் பிரோடெனோ முன்னணி வீரர்களை பின்னுக்குத் தள்ளி அசத்தியுள்ளார்.

## படகுப் போட்டியில் பிரிட்டன் வீரருக்கு தங்கம்

ஆண்களுக்கான படகுப் போட்டி (லேசர்) பிரிவில் பிரிட்டன் வீரர் குட்டீசன்போல் தங்கம் வென்றார். வெள்ளி பதக்கத்தை சுலோவேனியாவின் போகா வசிலியும் வெண்கலப் பதக்கத்தை இத்தாலியின் றொமேரோ டியகோவும் வென்றனர்.

## ஜேர்மனி வீரர் தங்கம் வென்றார்

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த ஆண்களுக்கான பளு தூக்கும் (105 கிலோ) பிரிவில் ஜேர்மனியின் மததியாஸ் ஸ்டெயினர் தங்கம் வென்றார். இவரைத் தொடர்ந்து ரஷ்யாவின் ஈவ்ஜென்னி சிகிஸ்ஷேவ் வெள்ளிப் பதக்கமும் லற்வியாவின் விக்டோர்ஸ் ஸ்கொர்பாதிஸ வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

**பாலா**




# உலகின் நம்பர்-1 ஆனார் நடால் பெடரரின் 5 ஆண்டு இராஜ்ஜியம் தகர்ந்தது

(பாரிஸ்)

உலக டென்னிஸ் தர வரிசையில் 5 ஆண்டுகள் முதலிடத்தில் இருந்த பெடரரை பின்னுக்குத் தள்ளிவிட்டு ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் முதலிடம் பிடித்தார்.

### நடால் முதலிடம்

உலக டென்னிஸ் தர வரிசையில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிஸ்சர்லாந்து நாட்டைச்சேர்ந்த 27 வயதான றோஜர் பெடரர் முதலிடத்தில் அசைக்க முடியாத வீரராக விளங்கினார்.

அவர் கடந்த 237 வாரங்களாக (4 ஆண்டுகள்,11 மாதம் மற்றும் ஒரு வாரம்) முதலிடத்தில் இருந்தார்.

இந்த நிலையில் உலக டென்னிஸ் சம்மேளனம் நேற்று முன்தினம் வெளியிட்ட தர வரிசையில் 22 வயதான ஸ்பெயின் வீரர் ரபேல் நடால, பெடரரை பின்னுக்குத் தள்ளி விட்டு முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த விம்பிள்டன் போட்டியில் பெடரரை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்ற நடால், பீஜிங் ஒலிம்பிக்போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றார்.

இந்த ஆண்டு சிறப்பாக ஆடி மொத்தம் 8 சம்பியன் பட்டங்கள் வென்றுள்ள நடால், பெடரரின் நீண்டநாள் ஆதிக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

முதலிடத்தைப் பிடித்த நடால் கூறுகையில்,

'முதலிடத்தைப் பிடித்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால்இந்த உணர்வு என்னைப் பெரிய அளவில் மாற்றவில்லை.ஏனெனில் நான் கடந்த ஆண்டும் சிறப்பாக செயற்பட்டேன்' என்றார்.

### அனா இவானோவிச்

இதேபோல் பெண்கள் ஒற்றையர் தர வரிசையில் செர்பியா வீராங்கனை அனா இவானோவிச் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.



முதலிடத்திலிருந்த மற்றொரு சேர்பிய வீராங்கனை ஜெலீனா ஜோங்கோவிச 2-வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

## பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 43 | 14 | 19 | 76 |
| அமெரிக்கா | 26 | 26 | 27 | 79 |
| பிரித்தானியா | 16 | 9 | 8 | 33 |
| அவுஸ்திரேலியா | 11 | 12 | 12 | 35 |
| ஜேர்மனி | 11 | 8 | 9 | 28 |
| ரஷ்யா | 10 | 14 | 18 | 42 |
| கொரியா | 8 | 10 | 6 | 24 |
| ஜப்பான் | 8 | 6 | 8 | 22 |
| இத்தாலி | 6 | 6 | 7 | 19 |
| உக்ரைன் | 5 | 4 | 8 | 17 |
| பிரான்ஸ் | 4 | 11 | 14 | 29 |
| நெதர்லாந்து | 4 | 5 | 4 | 13 |
| ரோமேனியா | 4 | 1 | 3 | 8 |
| ஸ்பெயின் | 3 | 4 | 2 | 9 |
| போலந்து | 3 | 4 | 1 | 8 |
| சுலோவாக்கியா | 3 | 1 | – | 4 |
| கனடா | 2 | 6 | 5 | 13 |
| கென்யா | 2 | 4 | 2 | 8 |
| செக்குடியரசு | 2 | 3 | – | 5 |
| ஜமேக்கா | 2 | 3 | – | 5 |
| நியூசிலாந்து | 2 | 1 | 5 | 8 |
| டென்மார்க் | 2 | 1 | 3 | 6 |
| வடகொரியா | 2 | 1 | 3 | 6 |
| எதியோப்பியா | 2 | 1 | – | 3 |
| சுவிட்சர்லாந்து | 2 | – | 3 | 5 |
| ஜோர்ஜியா | 2 | – | 1 | 3 |
| கியூபா | 1 | 5 | 5 | 11 |
| பெலாரஸ் | 1 | 3 | 7 | 11 |
| கஜகஸ்தான் | 1 | 3 | 4 | 8 |
| சிம்பாவே | 1 | 3 | – | 4 |
| அஜர்பைஜான் | 1 | 2 | 2 | 5 |
| நோர்வே | 1 | 2 | 2 | 5 |
| சுலோவேனியா | 1 | 2 | 2 | 5 |
| இந்தோனேசியா | 1 | 1 | 3 | 5 |
| பல்கேரியா | 1 | 1 | 2 | 4 |
| பின்லாந்து | 1 | 1 | 1 | 3 |
| எஸ்தோனியா | 1 | 1 | – | 2 |
| மொங்கோலியா | 1 | 1 | – | 2 |
| பிரேஸில் | 1 | – | 5 | 6 |
| ஆர்ஜென்டீனா | 1 | – | 1 | 2 |
| பர்கேன் | 1 | – | – | 1 |
| கமரூன் | 1 | – | – | 1 |
| இந்தியா | 1 | – | – | 1 |
| பனாமா | 1 | – | – | 1 |
| தாய்லாந்து | 1 | – | – | 1 |
| தனிசியா | 1 | – | – | 1 |
| ஹங்கேரி | – | 4 | 1 | 5 |
| சுவீடன் | – | 3 | – | 3 |
| துருக்கி | – | 2 | 1 | 3 |
| உஸ்பெகிஸ்தான் | – | 1 | 3 | 4 |
| அவுஸ்திரியா | – | 1 | 2 | 3 |
| கிரீஸ் | – | 1 | 2 | 3 |
| லிதுவேனியா | – | 1 | 2 | 3 |
| அல்ஜீரியா | – | 1 | 1 | 2 |
| கொலம்பியா | – | 1 | 1 | 2 |
| குரோசியா | – | 1 | 1 | 2 |
| கார்கிஸ்தான் | – | 1 | 1 | 2 |
| செர்பியா | – | 1 | 1 | 2 |
| சிலி | – | 1 | – | 1 |
| ஈகுவடோர் | – | 1 | – | 1 |
| மலேசியா | – | 1 | – | 1 |
| போர்த்துக்கல் | – | 1 | – | 1 |
| தென்னாபிரிக்கா | – | 1 | – | 1 |
| சிங்கப்பூர் | – | 1 | – | 1 |
| ரினிடாட் | – | 1 | – | 1 |
| வியட்நாம் | – | 1 | – | 1 |
| ஆர்மேனியா | – | – | 5 | 5 |
| சீனா தைபே | – | – | 2 | 2 |
| எகிப்து | – | – | 1 | 1 |
| ஈரான் | – | – | 1 | 1 |
| லற்வியா | – | – | 1 | 1 |
| மொறோக்கோ | – | – | 1 | 1 |
| மெக்சிக்கோ | – | – | 1 | 1 |
| தஜிகிஸ்தான் | – | – | 1 | 1 |
| ருகோ | – | – | 1 | 1 |

## லக்மாலி வெளியேற்றம்

இலங்கை சார்பாக ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றிய ஈட்டி எறிதல் வீராங்கனை நதீகா லக்மாலி தகுதி சுற்றுடனேயே வெளியேறினார்.



நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஏ பிரிவு தகுதி சுற்றுப் போட்டியில் லக்மாலி அதிக பட்சமாக 54.28 மீற்றர் எறிந்து பங்கு பற்றிய 26 வீராங்கனைகளுள் 23-வது இடத்தைப் பிடித்தார். இதில் செக் குடியரசின் பார்ப்பரா ஸ்பொடகோவா 67.69 மீற்றர் தூரம் எறிந்து முதலிடத்தைப் பிடித்தார்.

இதன்படி ஏ பிரிவு தகுதி சுற்றுப் போட்டிகளில் இருந்து 5 வீராங்கனைகள் இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றனர். பெண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதிப்போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# இன்று ஒரு தகவல்

## இருட்டு

"இருட்டைக் கண்டால் பயம் உண்டாகிறதே... அது ஏன்?" என்று ஓஷோவிடம் கேட்டார்கள்.

அதற்கு அவர் மனிதனுடைய ஆதிகால வாழ்க்கையில் தொற்றிக் கொண்ட பயம் இது. வேரூன்றி இருக்கிறது இன்னும் போகவில்லை.

மனிதனுடைய எல்லா பணத்தையும் சேர்த்து மொத்த மாக ஒரு மனம் உண்டு... மனிதர்களின் நினைவு இந்த மொத்த மனதில் பதிந்திருக்கிறது. இந்த மொத்த மனத் தில் இருட்டு பற்றிய பயம் பதிந்து நீடிக்கிறது என்கிறார் அவர்.

இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வராத மனிதர்களும் இன்று அதிகம்பேர் உண்டு. ஒரு ஆள் ஆற்றுக்கு மீன்பிடிக்கப்போனான்.

இன்னும் விடியவில்லை. அதற்குள் வலையை எடுத்துக் கொண்டு கிளம்பிபோய் விட்டான். விடியும்வரை என்ன செய்வது? சும்மா கரையில் உட்கார்ந்து காலாட் டிக் கொண்டிருந்தான்.

காலில் ஏதோ ஒரு சின்னமூட்டை தட்டுப்பட்டது. இருட் டில் அது என்னவென்று சரியாகத் தெரியவில்லை. மூட் டைக்குள் சின்ன சின்ன கற்கள் நிறைந்திருந்தது.

சும்மா பொழுது போக வேண்டும் என்பதற்காக மூட்டைக்குள்ளிருந்து ஒவ்வொரு கல்லாக எடுத்து ஆற்றில் வீசிக்கொண்டிருந்தான்.

விடியும் வரைக்கும் வேலை இல்லை என்பதால் இப்படி செய்துகொண்டிருந் தான். கிழக்கே மெதுவாக வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது பொழுது விடியத் தொடங்கியது.

அதற்குள் அந்த மூட்டையில் இருந்த எல்லாக் கல்லையும் வீசியெறிந்துவிட்டான். கடைசியாக ஒரே ஒரு கல் மட்டும் தான் எஞ்சியிருந்தது. வெளிச்சம் வந்ததும் அந்தக் கல்லைப்பார்த்தான்.

அப்படியே திகைத்துப்போய்விட்டான். அவன் கையில் இருந்தது வெறும் கல் இல்லை... விலையுயர்ந்த இரத் தினக்கல் அது! இருட்டில் என்னவென்று புரியாததால் மூட்டையில் இருந்த எல்லா இரத்தினக் கற்களையும் ஆற்றில் வீசி யெறிந்திருக்கிறான்.

இப்பொழுது அவனுக்கு அழுகையே வந்துவிடும் போல் இருந்தது. வாழ்க்கையை வசதியாக்கிக்கொள்ளும் வாய்ப்பு இருந்தும் இருட்டில் அதை இழந்துவிட்டான்.

ஒரு வகையில் அவனுக்குக் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்திருக்கிறது. அதனால்தான் அந்தக் கடைசிக் கல்லை எறிவதற்கு முன் வெளிச்சம் வந்துவிட்டது!

பலபேருக்கு இந்த அளவுக்குக் கூட அதிர்ஷ்டம் இருப் பதில்லை! வாழ்க்கை என்பது ஒரு பெரிய புதையல் அதைப் புரிந்து கொள்ளாமலே மனிதன் அதை வீசியெறிந்து கொண்டிருக்கிறான் என்கிறான் ஓஷோ.

சில பேருக்கு புரிந்துகொள்ளும் நேரம் வருவதற்கு முன்பே வாழ்நாளெல்லாம் ஓடிப்போய்விடும்.

ஒருவன் சிறிய பையுடன் வந்து கொண்டிருந்தான். அதற்குள் ஏகப்பட்ட நகைகள், இரத்தினக்கற்கள் எல்லாம் இருந்தது.

வந்து கொண்டிருந்தவன் திடீரென அந்தப்பையை அப்படியே ஒரு குளத்தில் வீசியெறிந்துவிட்டான். மகான்கள் தான் இப்படி பற்றில்லாமல் இருப்பார்கள்.

"ஏன் அந்த விலைமதிப்புள்ள பையை வீசியெறிந்து விட்டீர்கள்?" என்று கேட்டார்.

அவனோடு வந்தவர் அவன் மெதுவாக "ஒரு பொலிஸ்காரர் பின்னாடி வந்துகொண்டிருக்கிறார்... அவர் போனபின் இதை எடுப்பேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வாக்குப் பெறுவதற்கான அரசாங்கத்தின் முயற்சியே மடு மாதா திருப்பலிப்பூசை ஒளிபரப்பு நடவடிக்கை

## ஐ.தே.க.எம்.பி. ஜயலத் ஜயவர்த்தனா

மருதமடு தேவாலயப் பகுதியை முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகக் கூறும் அரசாங்கம் ஏன் அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து வழிபாடு செவதற்கு பக்கதர்களுக்கு அனுமதி வழங்க மறுக்கின்றது. இதன் பின்னணியில் உள்ள உண்மையை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

வடமத்திய சப்பரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் மக்களை பிழையான வழியில் நடத்தவே அரச தொலைக்காட்சிகளில் மருதமடு திருப்பலிப் பூசைகள் ஒளிபரப்பப்பட்டது. கத்தோலிக்கர் களையும் மடுமாத பக்தர்களையும் ஏமாற்றி வாக்குகளைப் பெற அரசு முயற்சிக்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். கொழும்பில் எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

கடந்த இருபது வருட காலங்களில் ஆகஸ்ட் 14, 15, 16 ஆகிய மூன்று தினங்களும் மடுவுக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் நான் ஈடுபட்டு வருகின்றேன். பொது மக்களும் இதேபோல் தாங்கியிருந்து வழிபாடுகளை நடத்தினர்.

யுத்தக் காலத்தின் போதும் இந்த மத உரிமையை வழங்க வேண்டுமென வலியுறுத்தி வந்தவன் நான்.

இன்று மடுமாதா திருத்தலப் பிரதேசத்தை அரசர்ங்கம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் எனவே பக்தர்கள் எதுவிதமான அச்சமின்றி தமது மதக் கடமைகளை மேற்கொள்ள முடியுமென்றும் அறிவித்திருந்தது.

இதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அநுராதபுரம் பொலிஸ் அத்தியட்சருக்கும் வன்னிப் பிரதேச கட்டளைத் தளபதிக்கும் மடுவுக்கு சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்த மதக் கடமைகளை மேற்கொள்ள அனுமதி கோரினேன்.

மடுத்திருப்பதிக்கு வழிபாடுகளை நடத்த அனுமதி வழங்கிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 3 நாள் இரவு தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்க முடியாதென எழுத்து மூலம் அறிவித்தார்.

அரசாங்கத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் மடுமாதா தேவாலயப் பகுதி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது ஆனால் மூன்று நாட்கள் தங்கியிருந்து மதக் கடமைகளை மேற்கொள்ள அனுமதியளிக்க முடியாதென அறிவிக்கின்றது. இது எனக்கு மட்டுமல்ல, அனைத்து பக்கதர்களினதும் மதச் சுதந்திரத்தை பறிக்கும் மனித உரிமைச் செயலாகும்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள், பாதுகாப்பும் பக்தர்களுக்கு வழிபடக்கூடிய சூழலும் இருப்பதாக அரசாங்கம் கூறிவரும் நிலையில் இவ்வாறு தங்கியிருந்து வழிபடுவதற்கு தடை விதிப்பதற்கு என்ன காரணம். என்னோடு மடுவுக்கு வந்த பிரதேச நிருபரொருவர் மடுத் திருப்பதிக்குள் அனுமதிக்கப்படவில்லை.

ஆனால் அரச ஊடகமான ரூபவாஹினிக்கு அனுமதியளிக்கப்



பட்டதோடு 15ஆம் திகதி திருப்பலிப் பூசையை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

சப்ரகமுவ வடமத்திய மாகாண சபைகள் தேர்தல்கள் நெருங்கியுள்ள நிலையில் கத்தோலிக்கர் களையும் மடுமாதா பக்தர்களையும் ஏமாற்றி வாக்குகளை பெறுவதே இதன் உள்நோக்கமாகும்.

அத்தோடு சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் வித்தையே இதுவாகும். மடுமாதா ஆலயத்தின் வழிபாடுகள் நடத்தப்படும் நேரங்கள் பக்தர்கள் வந்துபோகும் காலங்களையும் அரசாங்கம் அறிவித்துள்ளமை அரசியலமைப்பின் மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை அரசாங்கம் மீறியுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. (அ)



இந்துப் போட் இராசரத்தினம் அவர்களின் 124ஆவது நினைவுதினம் சைவித்தியாவிருத்திச்சங்க மண்டபத்தில் தலைவர் அ.தற்பரானந்தம் தலைமையில் நடைபெற்ற போது ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம் நினைவு பேருரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

20.08.2008
(ஆவணி 04 புதன்கிழமை)
உத்தரட்டாதி பிற்பகல் 3.37 மணிவரை
சதுர்த்தி பின்னிரவு 12.30 மணிவரை
இராகுகாலம்-12.05-01.35 மணிவரை
சுபநேரம்-04.35-06.05 மணிவரை
சங்கடாஹர கணபதி விரதம்

| | |
|---|---|
| மேடம் | சோம்பல்நிலை, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், திடீர் பயணம். |
| இடபம் | நண்பர்கள் உதவி, குடும்ப சுகம், சயனசுகம, தன்வருவாய். |
| மிதுனம் | எடுத்தகருமங்கள் கைகூடும், நன்கொடை, அதிகாரம், பிறர் உதவி. |
| கடகம் | எதிர்பாராத செலவு, பிரயாணம், தொழில் மந்தநிலை, வீண் பயம. |
| சிங்கம் | கடன்பிரச்சினை, வாகன பயம், காரிய தடங்கல், தர்மம். |
| கன்னி | மனோதைரியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் நன்மை, முயற்சி கைகூடும். |
| துலாம் | அதிக பிரயாசை, போசன நன்மை, சத்துரு ஜெயம், உடல் நலம். |
| விருச்சிகம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பூர்வ புண்ணிய கருமம், பணவிரயம். |
| தனுசு | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், போசனசுகம், சுப செலவு. |
| மகரம் | பிரயாண நன்மை, காரிய சித்தி, கீர்த்தி, உறவினர் உதவி. |
| கும்பம் | கடினவார்த்தை, எடுத்தகாரியம் தாமதமாகும், தனவிரயம், மாதர் உதவி. |
| மீனம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, கலந்துரையாடல். |

வளவன்

# கிராம அலுவலர்களுக்கான சீருடை பற்றிய அமைச்சின் அறிவுறுத்தல்

கிராம அலுவலர்களுடைய உத்தியோகபூர்வ கடமைகள் ஆற்றும் சந்தர்ப்பங்களில் தற்போது பயன்படுத்தப்படும் சீருடை பற்றி அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் காரணமாக அதில் ஓரினத்தன்மை இல்லாமை பற்றி அமைச்சின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

அதன் படி கிராம அலுவலர்களின் சீருடை தொடர்பாகவும் சீருடை பயன்படுத்துதல் தொடர்பாகவும் தொழிற்சங்கங்களுடன் மேற் கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் ஸ்தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இணக்கம் என்பவற்றின் பேரில் கிராம அலுவலர்களின் சீருடை தொடர்பாக அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் சகல பிரதேச செயலாளர்களுக்கும் கடித மூலம் அறிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கிராம அலுவலர்களின் சீருடை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கடந்த கால மூவகையான கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் இத்தால் ரத்துச் செய்யப்படுவதுடன் அதில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின்படி பயன்படுத்தப்படும் சீருடைகளை 2009.01.01 ஆம் திகதியின் பின்னர் பயன்படுத்தலாகாது.

கிராம அலுவலர்களின் சீருடை கறுப்பு காற்சட்டை மற்றும் டியூலிப் பொலருடன் கூடிய நீண்ட அல்லது கட்டையான கையைக் கொண்டமைந்த மேற்சட்டையாக இருத்தல் வேண்டும். பெண் கிராம அலுவலர்களின் சீருடை அது கிரீம் நிறமுடைய சேலை அல்லது கண்டிய சேலையாக (ஓசரிய) இருத்தல் வேண்டும். கிராம அலுவலர்கள் கடமையின் பொருட்டு சீருடை மற்றும் உத்தியோகபூர்வ இலட்சினையை அணிந்து கிராம அலுவலர் நாள் குறிப்பேட்டையும் கொண்டு செல்ல வேண்டும். (ஓ)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் "ஆழ்வார்கள்" என்னும் விடயம்பற்றி வேல்.நந்தகுமார் ஆசிரியர் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## அதிபர் நியமனம்

(மருதங்கேணி)

துன்னாலை மேற்கு மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலையில் புதிய அதிபராக வடமராட்சி கல்வி வலய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராக பணியாற்றிய கி.குகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பாடசாலையின் அதிபராக இருந்த என்.அரியலிங்கம் இளைப்பாறியதை யடுத்து இவ் நியமனம் வழங்கப்பட்டது. (ஓ-35)

## கொக்குவில் இந்து ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்களால் நடத்தப்படும் மேற்படி கருத்தரங்குகளில் கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் கேட்டுள்ளார். (ந)

## காட்டுப் பன்றிகளினால் வெங்காயச் செய்கை பாதிப்பு

(மருதங்கேணி)

புலோலி தெற்கு அல்வாய்ப் பகுதிகளில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இரவில் காட்டுப்பன்றிகள் இவ்விவசாய நிலங்களுக்குள் புகுந்து வெங்காயச் செய்கையைக் கிளறியும் அழித்தும் நாசமாக்கி வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர். (ஓ-35)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப் பெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை 10.30 மணியளவில் வட்டுக் கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் பெரியபுராணம் தொடர்சொற் பொழிவாற்றுவார். (ஓ-35)

## தெய்வீக இசையரங்கு

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடாத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனத்தின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

அணி செய் கலைஞர்களாக வயலின் திருமதி கிருஷ்ணாலினி அகிலன், மிருதங்கம் வி.ரமணா ஆகியோர் பங்குபற்றுவார்கள். (ஓ)

# சிறார்களுக்கு மக்கள்வங்கி வழங்கும் 100ரூபாவுடனான சேமிப்பு கணக்கு

(பருத்தித்துறை)

குழந்தைகளுக்கான சேமிப்பை ஊக்குவிக்குமுகமாக ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 100 ரூபாவுடனான கணக்கொன்றை மக்கள் வங்கியே திறந்து கொடுப்பதாக வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் தெரிவித்தார்.

ஒரு குடும்பத்தில் ஐந்து வயதுக்குக் கீழ் எத்தனை குழந்தைகள் இருந்தாலும் அத்தனைபேருக்கும் 100ரூபாவுடன் கணக்குகள் திறக்கப்படும். இவ்வருட இறுதிமட்டுமே நடைமுறையில் இருக்கும் இத்திட்டத்தில் சகல குழந்தைகளையும் இணைப்பதற்காக பாலர் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுடன் தொடர்புகொண்டு கணிசமான அளவு கணக்குகள் திறந்துள்ளதாகவும் இதுவரை கணக்குகளை திறக்காதோர் வங்கியுடன் தொடர்பு கொண்டு இக்கணக்குகளை திறக்குமாறும் அறிவித்துள்ளார்.

மக்கள் வங்கியின் எந்தக் கிளையிலும் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)

## ஓய்வூதிய திணைக்களத்தின் நடமாடும் சேவை

இதுவரை விதவை அநாதை ஓய்வூதிய (W&OP) இலக்கத்தை பெற்றுக்கொள்ளாத அரச அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு இலக்கங்கள் வழங்குவதற் கான நடமாடும் சேவையை நடாத்த ஓய்வூதிய திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இந் நடமாடும் சேவை 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ் கச்சேரியிலும், 28ஆம்திகதி கரவெட்டிப் பிரதேச செயலகத்திலும் காலை 8.30 மணி தொடக்கம் நடை பெற உள்ளது.

வி.அ.ஒ (W&OP) இலக்கம் பெறுவதன் பொருட்டான முன்நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் எல்லாத் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அரச அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரச அலுவலர்கள் தமக்குரிய திணைக்களத் தலைவர்களுடன் இது விடயமாக உடன் தொடர்பு கொள்குமாறும் இந்நடமாடும் சேவை தொடர்பாக இதுவரை எதுவித அறிவித் தல்களும் கிடைக்காத திணைக்களத் தலைவர்கள் உடனடியாக யாழ் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ் பிராந்திய ஆணையாளர் கேட்டுக் கொள்கின்றார். (அ)

## நற்போசன விழிப்புணர்வு கண்காட்சி

(காரைநகர்)

காரைநகர் வாழ் மக்கள் நடாத்தும் 'நற்போசன விழிப்புணர்வுக் கண்காட்சி' யாழ். கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு பாடசாலையில் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் மு.ப.9.30 மணி முதல் 4 மணிவரை திருமதி க.விக்கினேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் அருணா புண்ணியமூர்த்தி, காரைநகர் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் டாக்டர் ஜே.எம்.சி.பி.ஜெயசேகரா, டாக்டர் சு.சுவாமிநாதன், காரைநகர் ஆயுள்வேத மத்திய மருந்தக டாக்டர் செல்வி கிளமென்ரீனா சிறில்,

காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன், காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன், கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய அதிபர் கா.குமாரவேல், யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் வே.குமாரசாமி, பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜாக் குருக்கள், வணபிதா பி.தேவதாஸ் அடிகளார்,

கௌரவ விருந்தினர்களாக காரைநகர் பல.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் செ.கோடிலிங்கம், காரைநகர் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி ச.சுமதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மங்கலவிளக்கேற்றல், இறைவணக்கம் நற்போசன விழிப்புணர்வு, கண்காட்சியைத் திறந்து வைத்தல், சத்துக்கள் தரும் நல் வித்துக்கள் பார்வையிடல். விருந்தினர் உரை என்பன நடைபெறவுள்ளதுடன் இரு நாட்களும் காலை 9.30 மணி முதல் 4 மணிவரைக்கும் பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படுவர் எனவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-246)




## நல்லூர் உற்சவகால ஆன்மீக நிகழ்வுகள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு "ஆறு படை வீடு" எனும் பொருளில் சிதம்பரநாதன் சசீவன் சொற்பொழிவாற்றுவார்.

அத்துடன் வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் அறநெறிப்பாடசாலை மற்றும் சித்திரமேழி ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (ஓ)

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உத்தியோகத்தர்களுக்கான வேதனம்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வி சார், கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கான ஆவணி மாத வேதனம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் இலங்கை வங்கிக்கிளை மூலம் வழங்கப்படவுள்ளது என பீடாதிபதி அறிவித்துள்ளார். (ஓ)

## ஓய்வூதிய ஆவணங்கள்

(யாழ்ப்பாணம்)

பிரதம செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் கொழும்பு ஓய்வூதிய திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து எதிர்வரும் 26ஆம் திகதி காலை 8மணிக்கு ஓய்வூதியம் தொடர் பாக நடமாடும் சேவையினை நடாத்த உள்ளனர்.

சுகாதாரத்திணைக்களத்தில் பணிபுரிகின்ற இதுவரை விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய அட்டையும் இலக்கமும் கிடைக்கப் பெறாதவர்கள் திருமண அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி) சகல பிறப்பத்தாட்சிப்பத்திரங்கள் மற்றும் உரிய ஆவணங்களுடன் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சமர்ப்பிக்குமாறும்,

ஏற்கனவே சான்றிதழ் களைச் சமர்ப்பித்தவர்களும் த்வறாது உரிய திகதிக்கு முன்னதாக சகல ஆவணங்களுடனும் வெள்ளிக்கிழமை பணிமனைக்கு சமூகம் தருமாறும் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் சி.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)

# பாதுகாப்பு வேலிகள் அற்ற நிலையில் நிலாவரைக் கிணறு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள நீரூற்று கிணறுகளில் மிகப்பெரியதான நிலாவரைக் கிணறு சுற்றுவேலிகள் அமைக்கப்படாமல் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இதனால் சிறுவர்கள் கிணற்றின் அருகே செல்வது ஆபத்தானதாக உள்ளது. மேலும் கிணறு பற்றிய விவரங்கள் அருகில் குறிப்பிடப்படவும் இல்லை.

நிலத்தின் ஆழ எல்லை காண முடியாதது என்ற பொருளில் நிலாவரை என அழைக்கப் பட்டாலும் 1896இல் அரசு நடாத்திய ஆய்வில் கிணற்றின் கிழக்குப் பகுதி 136அடி ஆழமும், வடபகுதி 145 அடி ஆழமும் மேற்கும் தெற்கும் முறையே 121 அடி, 120 அடி ஆழமும் கொண்டது என யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ் பேராசிரியரும், ஈழத்து இடப்பெயராய்வாளருமான பேராசிரியர் இ.பாலசுந்தரம் தனது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார். நிலாவரைக் கிணறு தோன் றியதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. இந் நீரூற்று கிணற்றிற்கும் வடக்கேயுள்ள கீரிமலை நீரூற்றுக்கும் தரைக்கீழான நீர் தொடர்பு காணப்படுகின்றது. ஆனாலும் இந் நீர் நன்னீராக் காணப்படுவதனால் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது.

இது போன்ற நீருற்றுக்கள் சுண்ணக் கல் பாறையமைப்பு கொண்ட பின்லாந்து, பிரான்ஸ், வெல்ஜியம் முதலான நாடுகளிலும் காணப்படுவதாக புவியியலாளர்கள் கூறுகின்றனர். நிலாவரை நீரூற்று கிணறு சம்பந்தமான தகவல்களை குறித்து வைத்தும், பாதுகாப்பு வேலிகளினை அமைத்தும் சுற்றுலா பயணிகளுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு உதவுமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்கிறார்கள். (ஓ-36)





யாழ்.வலய விசேட கல்விப் பிரிவினரால் வலயக்கல்வி அலுவலகத்தில் நடாத்தப்பட்ட யாழ்.வலய பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களிற்கான சிறுவர் முகாமும், பெற்றோருக்கான விழிப்புணர்வு செயற்பாடும், நிகழ்வில் பங்குகொண்ட ஒரு தொகுதி விசேட தேவையுடைய மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும், முகாமில் பங்குபற்றிய வளவாளர்களையும் முதல் படத்திலும், முகாமில் பங்குபற்றிய மாணவர்களை ஆக்க, அழகியல் செயற்பாடுகளில் ஈடுபட விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் மற்றும் வளவாளர்களால் வழிப்படுத்தப்படுவதனை ஏனைய படங்களிலும் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை (73)

### இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்


தேரோவின் கட்டுரையைக் கருத்தூன்றிப் படித்த ஓல்கொட் புத்த சமயத்தவரின் நலிவைத் துடைப்பதற்காக இலங்கைக்குப் புறப்பட்டார். அவர் 15-5-1880 இல் காலியில் இறங்கிப் புத்த சமய வளர்ச்சிக்காகத் தீவிரமாக உழைப்பாராயினர். இலங்கைப் பௌத்த ஞான சங்கம்ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் மூன்றாண்டுகளில் 200பாடசாலைகள் தொடங்கப்பட்டன. அவற்றோடு மூன்று கல்லூரிகளும் ஆரம்பிக்கப் படவே 20 ஆயிரம் பௌத்த மதப்பிள்ளைகளின் கண்கள் திறக்கப்பட்டன அத்தோடு பௌத்த மதப் பிரசாரசபையும் இயங்கத் தொடங்கவே அவர்கள் பௌத்த மதக் கொடிக்கு அஞ்சலி செய்யத் தொடங் கினார்கள். அதன் பின் வெசாக் திருநாளை விடுமுறையாகக் கணிக்குமாறு ஆள்பதி ஆதர் கோடன் அவர்களையும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆறுமுகநாவலர் அவர்களைப் பின் தொடர்ந்து கோப்பாய்ச் சபாபதி, நாவலர் காசி வாசி செந்திநாதையர், வித்துவ சிகோமணி பொன்னம்பலபிள்ளை, அம்பல வாண நாவலர் சதாவதானம் கதிரவேற்பிள்ளை முதலாய பேரறிஞர் வட இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் அநகாரிக தர்மபால வாலிசிங்ககரிச்சந்திர. பியதாச ஸ்ரீசேன முதலாயபெரியார்கள் தொண்டு செய்வாராயினர். இப்பால்சைவசமயமும் அப்பால் பௌத்த மதமும் ம்றுமலர்ச்சிப்பாதையில் தவழ்ந்து நடை பயில்வனவாயின.

சிங்களவரின் வரலாற்றைக் கூறும்மகாவமிசம்1871 ஆம் ஆண்டிலே சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அங்ஙனமே ஸ்ரீ சுமங்கல பண்டித பத்துவன் தொட, முதலியார் விக்கிரமசிங்க முதலாய விற்பத் திமான்கள் முயற்சியால் 1879 ஆம் ஆண்டில் சூளுவ வமிசமும் மொழி பெயர்க்கப்படலாயிற்று.


இங்ஙனம் கல்விப் பகுதியில் விழிப் பேற்

### மீள் பார்வை



கொம்பனித்தெரு:கொம்பனி வீதிக்கு 'ஸ்லேவ் ஐலன்ட்' (அடிமைகளின் தீவு) என பெயர் சூட்டியவர்கள் பிரித்தானியர்களாவர். போர்த்துக்கேய யுகத்தில் கொழும்பு நகரில் வாழ்ந்த கறுப்பின மக்கள் தொகை 4000 ஆகும். 18ஆவது நூற்றாண்டின் ஆரம்ப வருடத்தின் வண்டர் ஸ்டோன் என்ற பெயருடைய பிஸ்காலும் அவரது மனைவியும் உறங்கிக்கொண்டிருந்த போது கட்டிலின் கிழ் மறைந்திருந்த கறுப்பின மனிதனொருவனால் கொலை செய்யப்பட்டதுடன் ஆரம்பமான கறுப்பின கலவரம் போர்த்துக்கேய நிர்வாகத்தின் போது நிறுத்தப்பட்டதன் பின்னர் கொழும்பு நகரத்தில் வாழ்ந்த இவ்வாறான கறுப்பின மக்கள் இந்த இடத்திற்கு அனுப்பப்பட்டனர். இந்த மக்கள் வேறு இனத்தவராக வாழ இயலாவிட்டாலும் தற்பொழுது இவர்கள் புத்தளம்,திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர்.(charles scowen and co-1890)

பட்டமை காரணமாக வைத்தியம்சட்டம் முதலிய துறைகள் மேலோங்கின. நியாய வாதிகளுக்குரியபயிற்சியும் நியாய துரந்தரக்குரிய பயிற்சியும்1873 ஆம்ஆண்டிலும் 1889 ஆம்ஆண்டிலும் இலங்கையில் பெறக்கூடிய வசதிகள் செய்யப்பட்டன. இதற்கு முன்தனிப்பட்ட பெரியார்களிடமே அத்துறைகளிற்பயிற்சி பெறும் வசதி நிலவிற்று. சேர் இராமநாதன் அவர்கள் 1872 ஆம் ஆண்டில் தமது இளமை பராயத்தில் றிச்சாட்மோகன் என்ற விற்பத்திமானிடம் பயிற்சி பெற்றார்.



நாவலர் அவர்களின் உறுதியான உழைப் பின்பயனாக வண்ணார் பண்ணையில் சைவப் பெரியார்கள் ஒன்று சேர்ந்து சைவபரிபாலன சபை எனப்படும் தாபனத்தை 1888 ஆம் ஆண்டில் நிறுவினார்கள் அவர்களுடைய முயற்சியின் பயனாக அச்சுக்கூடந் தாபிக்கப்பட்டு இந்து சாதனம்என்னும் பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் பிரசுரிக்கப் படலாயிற்று. இச்சபையாரின் பரிபாலனத்

க.சி.குலரத்தினம்

தில் சைவ, ஆங்கில பாடசாலையொன்று நிறுவப்பட்டது. அது இன்று யாழ்ப்பாண இந்து கல்லூரியாகப் பரிணமித்து இலங்கையிலுள்ள உயர்தரக் கல்லூரிகளிலொன்றாக நிலவுகின்றது.

அங்ஙனமே பௌத்த பரிபாலன சபையாரும் தாமே தம்முடைய சமயத் தலைவரைத் தெரிந்து கொள்ளும் நல்வாய்ப்பைப் பெற்றார்கள். முன்கூறிய அமெரிக்க வாசியாகிய ஓல்கொற்என்ற பெரியாரின் முயற்சியால் பௌத்தசமயம் உன்னத நிலை அடைந்த காலத்திலேதான் 1886 ஆம் ஆண்டில் ஆனந்தக்கல்லூரி என்றபௌத்த ஆங்கில கலாசாலை நிறுவப்பட்டது. (தொடரும்)







அண்மையில் நடைபெற்ற வலிமேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மற்றும் பிரமுகர்களையும், நிகழ்வில் கலந்துகொண்ட பார்வையாளர்களையும், முன்பள்ளி ஆசிரியைகளின் கயிறிழுத்தல் போட்டியையும் படங்களில் காணலாம். (படங்கள்: குரு)

# யாழ்.குடாநாட்டில் ஆங்கிலமொழிக் கற்றல், கற்பித்தல் (3)

## பிரயோக மொழியியலினூடாக ஓர் நோக்கு

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இம்மூன்று கேட்பாடுகளும் ஏதோ ஒரு வகையில் (இக் கோட்பாடுகள் என்று ஆசிரியர்கள், அறியாமலேயே) பிரயோகிக்கப்படுகின்றன. அத்துடன், "ஆங்கிலமொழிக் கற்பித்தல், நெறியைக் கற்பிக்கின்ற எந்த ஒரு அமைப்பின் பாடத்திட்டத்திலும் இவை முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளன. இக்கோட்பாடுகள் பற்றிய தெளிவு ஆசிரிய மாணவர்களிற்கு நிச்சயம் இருக்கவேண்டும். ஆனால், துரதிர்ஷடவசமாக, எமது ஆசிரியர்கள் கோட்பாடுகளை உள்வாங்கும் தன்மை கொண்டுள்ளார்களே தவிர, அவற்றைப் பயன்படுத்தி அவர் தம் சார் தொழில் திறன்களில் குறிப்பிட்டளவு மாற்றத்தைக் கொண்டுவர முனைவதில்லை. இது ஓர் பொதுவான அபிப்பிராயம். இக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி அழகான ஆய்வுக் கட்டுரைகளை வரையலாம். பதவி உயர்வுகளிற்குச் சமர்ப்பிக்கலாம், நூல்களாகவும், சஞ்சிகைகளாகவும் தொகுத்து வெளியிடலாம். ஆனால் இக் கோட்பாடுகள் வரையறைகளிற்குள் எடுத்து வைத்து உரிமை கொண்டாடப்பட வேண்டியவை அல்ல.

இவற்றின் பயன்கள் உணரப்படவேண்டிய, அறியப்படவேண்டிய ஒரேயொரு தளம் க்ஷமாணவர்களும் அவர்களது வகுப்பறைக் கற்றலும் ஆங்கில ஆசிரிய மாணவர்களின் கற்றலானது முழுமையாக கோட்பாட்டு மையக் கற்றலாக அமையக்கூடாது அவர்கள் பல்கலைக்கழகங்களில் நெறிகளைக் கற்கும் பொழுது பல்வேறுபட்ட மொழிபற்றிய கோட்பாடுகளை உள்வாங்குகின்றார்கள். (Consumers of theories) அவர்கள் தம் உள்வாங்கும் திறன்களை தமது பல்வேறு பரீட்சைகளின் அடைவுகளை எய்துவதற்குப் பயன்படுத்துகின்றார்கள். உதாரணமாக Kirashen என்பவரின் Input Hyppothesis மாணவர்களிற்கு மொழி பற்றி உள்ளீடு பற்றிய விடயங்களையும் அளவுகளையும் பிரஸ்தாபிக்கின்றது. அதாவது சாதாரணமாக நூல் வடிவத்தில் தரப்பட்டுள்ள மொழிசார் திறன்களை விட வகுப்பறையில் கொடுக்கப்படும் மொழியின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும். இதை எவ் வாறு அதிகரிக்க முடியும் என்ற தெளிவை ஒரு ஆங்கில ஆசிரியர்களினால் இனங் காண முடியும்.

மொழி பற்றிய இலக்கண அடைவு அதிகரிக்கப்படவேண்டுமா பல்வேறுபட்ட மொழித் திறன்கள் (Skills) பற்றிய அடைவு அதிகரிக்கப்பட வேண்டுமா என்பதை தொடர்ச்சியான வகுப்பறைக் கற்பித்தலின் அனுபவத்தையும், மாணவர்களின் மொழியினூடான நடத்தையும் (Output or performance) வைத்து அளவிட முடியும்.

தான் அறிந்த உள்வாங்கிய கோட்பாட்டு அறிவை பிரயோகிக்கும் ஆற்றல் ஆசிரியர்களால் வளர்த்தெடுக்கப்படவேண்டும். ஓர் ஆங்கில ஆசிரியன் வகுப்பறையில் ஆய்வாளானாகவும் அமுல்படுத்துபவனாகவும் விளங்குகின்றான். இத்தகைய இரட்டைத் தொழில்பாடு (dual function ) ஆசிரியனின் தொழில் விருத்திக்கு மிகவும் இன்றியமையாதது. வெறுமனே விடயங்களைத் தொகுத்து கூறுவதும், மாணவர்களிற்குத் தொடர்ந்து வேலைத் திட்டங்களை வழங்கி அவர்களை வகுப்பறையில் அழகிய சிலைகளாக வைத்திருப்பதும் ஆங்கிலம் கற்பித்தலிற்கு அழகல்ல. மாணவர்கள் தமது அடைவுத் திறன்களின் மூலம் தொழிற்பட வேண்டும். அவனைத் தொழில்பட வைக்கும் எரிபொருளாக ஆசிரியன் மாற வேண்டும்.

ஒரு காலத்தில் "Teacher Talk" ஆசிரியரின் வகுப்பறை மொழி மாத்திரமே மாணவர்களிற்கு துல்லியமான Input ஆகக் காணப்பட்டது. ஆனால் தற்சமயம் பல்வேறுபட்ட வடிவங்களில் மாணவர்கள் மொழியின் அடைவுக்கு முகம் கொடுக் கின்றார்கள்.

நூல்கள், செயல்நூல்கள், இலத்திரனியல் ஊடகங்களினூடாக சேகரிக்கும் தகவல்கள், நாவல்கள் போன்றன மாணவனிற்குத் தேவையான மொழி அடைவை Input அல்லது. மொழிச் செலுத்துகையை செம்மைப்படுத்து வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்கும் அல்லது பயன்படுத்தும் எந்தவொரு மாணவனது தேர்ச்சியானது இரு மொழி தழுவிய தேர்ச்சியாகவே காணப்படும்.

அதாவது அவனது முதல் மொழித் திறன்களும், கற்றலின் மூலம் தேறிய இரண்டாம் மொழித்திறன்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தே இறுதியில் மாணவன் தனது இருமொழி தழுவிய திறனை எய்துகின்றான். (Inter Language competence) எனவே தான், எந்தவொரு இரண்டாம்மொழியைக் கற்கும் மாணவனும், அந்த மொழியை முதலாம் மொழியாகப் பேசுபவர்களின் முழுத் திறனையும் எய்து வதில்லை, எய்த வேண்டிய அவசியமும் இல்லை.

பொதுவாக யாழ்.குடாநாட்டில் எமது மாணவர்கள் ஆங்கிலமொழித் திறனைப் பொறுத்த வரை இருவகையான கல்விசார் திறன்களை எய்த முற்படுகின்றார்கள்.

- அடிப்படை தொடர்பாடலுக்கான மொழித் திறன்கள் (BICS-Basic Interpersonal Communication Skills)
- கல்விப் புலங்களை விருத்திசெய்வதற்காக தேவைப்படும் ஆங்கிலமொழிப் புலமை (CALP) -Cognitive Academic Language Proficiency)

BICS அடிப்படையிலான திறன்களைப் பொதுவாக பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பதன் மூலம் எய்தப்படுகின்றன. பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடத்திட்டங் களின் மூலம் ஓர் மாணவன் சுமாராகத் தொடர்பாடலுக்கான திறன்களை எய்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் இவ் அனுபவம் உண்மையானதா என்பது ஆய்வுக்குரிய ஓர் விடயமாகும். (தொடரும்)

வ.பரந்தாமன்
விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிப் போதனை நிலையம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# புலிகளுக்கு எதிராக பயங்கரவாதத்திற்கெதிரான ஐரோப்பிய பொறி முறையினை அமுல்படுத்துக

## அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிரான ஐரோப்பிய பொறி முறையினை விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் ஐரோப்பிய ஒன்றியம் அமுல்படுத்த வேண்டும் என அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அரசாங்க உயர் மட்டத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், ரீ.சீ.சி ஆகிய அமைப்புக்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் செயற் பட்டுவருவது தொடர்பான ஆவணங்களை யும் அரசாங்கம் ஐரோப்பியஒன்றியநாடுகளில்செயற் பட்டுவருவது தொடர்பான ஆவணங்களையும் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 அங்கத்துவ நாடுகளுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக அரசாங்க உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் ஐரோப்பிய ஒன்றியத்தின்பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் உள்ளடக்கப் பட்டுள்ள போதிலும் இணையத்தளம் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்கள் வாயிலாக தற்போதும் அவர்கள் நிதி சேகரிப்பு மற்றும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திற்குச் சுட்டி காட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஐரோப்பிய பொறி முறையினை அமுல் படுத்த வேண்டும் எனவும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் நிறுவனங்கள் குறித்த ஆவணங்களை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சமர்ப்பித்துள்ளோம். சுனாமி நிவாரணப் பணிகளுக்காக வழங்கப்பட்ட பணம் எவ்வாறு பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்டுத்தப்பட்டது என்பதையும் நாம் சுட்டிகாட்டியுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியம் இது குறித்து தற்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்த விடயங்களை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெளிவுபடுத்துவது இலகுவான விடயமல்ல இதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். இருப்பினும் இதற்கான அழுத்தங்களைநாம்வழங்கிக்கொண்டிருப்போம் என அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிரான ஐரோப்பிய பொறி முறை அல்கைதா இயக்கத்திற்கு எதிராக அமுல்படுத்தப்படுவதாகச் சுட்டிக் காட்டியுள்ள அரசாங்கம் அது போன்றே விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் அமுல்படுத்தப் படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்திருந்தாலும் அவர்களது செயற்பாடுகள் அங்கு வேறுவழிகளில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இது குறித்து ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 27 நாடுகளுக்கும் நாம் தெளிவுபடுத்த வேண்டிய தேவையுள்ளது.

ஏனெனின் ஒரு நாடு எதிர்த்தாலும் இதனை அமுல்படுத்த முடியாது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் மத்தியில் விடுதலைப்புலிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புக்கள் தொடர்பாக அறிவூட்டும் சமூக மட்டத்திலான செயற்பாடுகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ)

## அரச சார்பற்ற நிறுவனங்களின் உபகரணங்களை, அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டுவர இணக்கம்

### கொழும்பு ஊடகம்தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் செயற்பட்டு வரும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது உபகரணங்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக் கொண்டு வருவதற்கு இணங்கியிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் கைகளுக்கு அந்த உபகரணங்கள் செல்வதைத் தடுப்பதற்கே அவர்கள் இதற்கு இணங்கியிருப்பதாக அரசாங்க அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உபகரணங்களை விடுதலைப்புலிகள் பெற்று அவற்றை இராணுவத்தினருக்கு எதிராக பயன்படுத்தும் ஆபத்து இருப்பதாக அரசாங்கம் சர்வதேச அரசசார் பற்ற நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியிருந்தது. அவ்வாறு அரசாங்கக் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு தமது உபகரணங்களைக் கொண்டுவராத அரச சார்பாற்ற நிறுவுனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டிருந்தது என அந்த அதிகாரி கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் நடை பெற்ற மனிதநேய உதவிகளின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான நோர்வே மக்கள் அமைப்புக்குச் சொந்தமான வாகனங்களை விடுதலைப் புலிகள் எடுத்துக் கொண்டமை போன்று எதிர்காலத்தில் எந்தச் சம்பவங்களும் இடம் பெறாமல் தடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அந்த ஊடகத்துக்குத் தெரிவித்தார்.

அனைத்து சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது உபகரணங்கள் மற்றும் அசையும் சொத்துக்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக் கொண்டுவருவதற்கு இந்தக் கூட்டத்தில் இணங்கப்பட்டது என அமைச்சர் கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் மோதல்களால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இலட்சக் கணக்கானவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களுக் கான மனித நேயப் பணிகள் அவசியமாகியுள்ள நிலையில் அரசசார்பற்ற நிறு வனங்களின் உபகரணங்களை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (அ)

## உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டரின் கடன் அட்டையை திருடி ரூ.1 இலட்சத்து 20 ஆயிரம் மோசடி

### சந்தேகத்தில் இரு பெண் கான்ஸ்டபிள்கள் கைது

(கொழும்பு)

கண்டி எசல பெரஹ்றா பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவதற்காக வந்திருந்த பெண் உதவி இன்ஸ்பெக்டர் ஒருவரின் கடன் அட்டையைத் திருடி சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த இரு பெண் கான்ஸ்டபிள்களை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி எசல பெரஹ்றா பாதுகாப்பு கடமைகளுக்காக நாட்டின் நாலா பகுதிகளிலிருந்தும் அதிகமான பொலிஸ் உத்தியோத்தர்கள் கடமைகளில்ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு வந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த விடுதியில் தங்கியிருந்த பெண் உதவி இன்ஸ்பெக்டர் ஒருவரின் வங்கி கடனட்டை திடீரென காணாமல் போயிருந்தது.

இது தொடர்பாக அவர் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இம் முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகத்தின் பேரில் அதே விடுதியில் தங்கியிருந்த இரு பெண்கான்ஸ்டபிள்களைகைதுசெய்த விசாரணைக்குட் படுத்தியி ருந்தனர்.

அத்துடன் அக்கடன் அட்டையின் மூலம் வங்கியில் சுமார் 1 இலட்சத்து இருபதாயாயிரம் ரூபா பெறப்பட்டிருந்தமையும் கண்டு பிடிக்கப்பட்டது.

பெலிஸார் இவ்விருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருபெண்பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பிட்டிகல, மீட்டியாகொட பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவிகின்றனர். (ஓ)

## மாவட்ட நீதிமன்றம் –யாழ்ப்பாணம்
## பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

01) குணநாயகம் அருட்செல்வம்
02) பெண் உதயகுமாரி இருவரும்
இல 47/02 அச்சுக்கூட ஒழுங்கை , யாழ்ப்பாணம்.

–வழக்காளிகள்

வழக்கு இலக்கம் ;ஈடு/81

–எதிராக

சண்முக்நாதன் பவளநாதன்
கோணாவளை ஒழுங்கை, கொக்குவில்
கிழக்கு ,யாழப்பாணம்.

–எதிராளி

2008.07.16 ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப் பட்ட விற்பனவு அதிகாரத்திற்கமைவாகவும இவ்விற்பனையை நடாத்த மன்று நியமித்துஉள்ளதால், இதன் கீழுள்ள ஆதனஅட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறிப்பிட்ட ஆதனத்தில் நின்று 2008ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை10.00 மணிக்கு பகிரங்கஏலத்தில் விற் பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

**தீர்வைத் தொகை**

மேற்குறித்த எதிராளி வழக்காளிகளுக்கு ரூபா 1,740,000 உம் மேலும் ரூ.1,500, 000 க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 30 %வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 2006.03.13ஆம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியா கிய 2007. 02.20ஆம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் முழுத்தொகை யும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியாக வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வட் டியும் வழக்கு செலவு ரூபா 30,540 உம் சேர்த்து வரும் தொகையிலிருந்து எதி ராளியால் ஏற்கனவே செலுத்தப்பட்ட ரூ. 1,050,000ஐ கழித்து, மிகுதித் தொகை கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாண யாழ்ப்பாணம் டிஸ்ரிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவி ற் பற்று கொக்குவில் கிழக்கிறை *'காலிங்கராயன்புலம்'* நில பர. 3ம் பயிர் வகைகளும் இது,03.09.1987 இல் அளவைக்காரன் வி.ஸ்ரீ.ஹரன் வரைந்த 140ஆம் இலக்கப் படத்தில் '1' என்னுமெண்ணாற் கட்டப்பட்டுள் ளது. இந்தப் பரப்பு மூன்றிற்கும் எல்லைகிழக்கு கோணாவளை ஒழுங்கை, வடக்கு சின்னையா சதானந்தபோஸ் பெண் கிரிசாந்தியின் ஆதனம் மேற்கு தனியார் ஒழுங்கையும் பொன்னம்பலம் நல்லையாவுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனமும் தெற்கு செல்வ ராசா பெண் மல்லிகாதேவியின் ஆதனம் இதனடங்கலும் இதைச் சேர்ந்த வைகளும் வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின் வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

1.அரச இறை(பவுண்டேஜ்)-1 %
2.பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக்கோவையின் படி
3.விளம்பரச் செலவுகளும் பிரசித்த செலவுகளும்
4.விற்பனை சம்பந்தமானபோக்குவரத்து செலவுகள்
5. விற்பனை கமிசன்-2 1/2 %
6.விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)

2008ம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆம் திகதி

–நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்,
பதிவாளர்/பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.



தீவக லயன்ஸ் கழகத்தின் 2008 /2009 வருடத்திற்கான செயற்குழு பதவி ஏற்பு அண்மையில் வேலணை மத்திய கல்லூரியில் நடை பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட லயன் சிவராஜேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும், நடப்பு வருடத்தின் தலைவர் ஆ.சபா நாதன், லயன் எஸ்.எஸ்.தங்கராசாமுன்னிலையில் பதவி ஏற்பதையும் கௌரவம் பெறும் லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

# நாட்டில் தீவிரவாதத்தை ஒடுக்குவதில் மத்திய அரசு தயக்கம் காட்டுவது ஏன்

## வெங்கையா நாயுடு கேள்வி

(பெங்களூர்)



முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவிப்பது தீவிரவாதிகளை எதிர்ப்பது போன்ற விடயங்களில் காங்கிரஸ் இரட்டை வேடம் போடுகிறது. அமர் நாத்தில் கோவிலுக்கு நிலம் ஒதுக்குவதை அங்குள்ள முஸ்லிம்கள் எதிர்க்க வில்லை. காங்கிரஸ் கட்சி யுடன் கூட்டணி யாக இருந்த முப்தி முகமது சையது கட்சி தான் இதனை எதிர்த்து போராட்டம் நடத்தியது. அந்த கட்சியை கண்டிக்க காங்கிரஸ் முன்வரவில்லை என பா.ஜனதா கட்சியின் தேசிய துணைத் தலைவர் வெங்கையா நாயுடு குற்றஞ் சாட்டியுள்ளார். மேலும் நாட்டில் பயங்கர வாதத்தை ஒடுக்க மத்திய அரசு தயக்கம் காட்டுவது ஏன்? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

பெங்களூரின் ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு செயல்படுகிறதா என்பதே தெயவில்லை. அந்த அளவிற்கு நாட்டில் அனைத்து விதமான பிரச்சினைகளும் தலை விரித்தாடுகின்றன.

நாட்டில் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் தொடர்புடைய சிமி இயக்க தீவிர வாதிகள் 10 பேரை குஜராத் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த நிலையில் சிமி இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து வரும் சமாஜ்வாடி கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சி குறித்து மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. இன் செயற்பாடுகள் பரவலாகிவிட்டன. இந்தியாவில் 800 இடங்களில் பயங்கரவாதிகளின் மையம் இருப்பதாக உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் தீவிர வாதத்தை ஒடுக்குவதில் மத்திய அரசு தயக்கம் காட்டுவது ஏன்? அமர்நாத்தில் கோவிலுக்கு நிலம் ஒதுக்குவதை அங்குள்ள முஸ்லிம்கள் எதிர்க்க வில்லை.

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியாக இருந்த முப்தி முகமது சையது கட்சி தான இதனை எதிர்த்து போராட்டம் நடத்தியது. அந்த கட்சியை கண்டிக்க காங்கிரஸ் முன்வர வில்லை.

முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவிப்பது, தீவிரவாதிகளை எதிர்ப்பது ஆகியவற்றில் காங்கிரஸ் இரட்டை வேடம் போடுகிறது. வங்களாதேசத்தில் இருந்து அசாம் வழியாக நாட்டிற்குள் தீவிரவாதிகள் ஊடுருவது அதிகரித்து உள்ளது.

இந்தி நடிகை சபனா ஆஸ்மி இந்தியாவில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை' என்று கூறி இருக்கிறார். உலகிலேயே இந்தியாதான் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பான தேசமாக விளங்குகிறது.

இந்தியாவின் முக்கியமான பதவிகளான ஜனாதிபதி, தலைமை நீதிபதி உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் முஸ்லிம்கள் இடம் பெற்று உள்ளனர். எனவே, சபனா ஆஸ்மியின் கருத்தை பா.ஜனதா வன்மையாக கண்டிக்கிறது. (ஓ)

### ஆப்கானிஸ்தானின் வன்முறைகளில் 73போரர்ளிகள், 5 படையினர் பலி

ஆப்கானிஸ்தான் தென் பகுதியில் வார இறுதியில் இடம் பெற்ற வன்முறைகளில் 73 தலிபான் போராளிகளும், 5 பாதுகாப்பு படையினரும் பலியாகியுள்ளதாக அந் நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.


தலைநகர் காபூரிலில் சுமார் 7ஆயிரம் பொலிஸார் ஞாயிற்றுக் கிழமை பிரதான இராணுவ நடவடிக்கை யொன்றை ஆரம்பித்தனர்.

ஆப்கானிஸ்தான் கல்வி அமைச் சர் தெருவோர குண்டுத் தாக்குதல் ஒன்றிலிருந்து எது வித காயமுமின்றி தப்பிய ஒரு நாள் கழித்தே இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஆப்கானிஸ்தானின் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் வன்முறை அச்சம் காரணமாக, எதுவித ஆர்ப்பாட்டமுமின்றி திங்கட்கிழமை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வயதாவதால் மூளையின் செயற்பாடுகள் மந்தமடைவதில்லை-ஜெர்மனிய விஞ்ஞானிகள்

எமக்கோ வயதாகிவிட்டது. புதியனவற்றைக் கற்று ஞாபகத்தில் வைத்திருக்கும் ஆற்றலை எமது மூளை இழந்துவிட்டது என கவலைப்படுபவர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தும் செய்தியொன்றை ஜெர்மனிய விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.



வயதாவதால் மூளையின் செயற்பாடு மந்தமடைந்து விடுவதில்லை. அது புதிய விட யங்களையும் யுத்திகளையும் வெகு விரைவாகக் கற்றுக் கொள்கிறது என இந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதற்காக 50 வயதுக்கும் 67 வயதுக்கும் இடைப்பட்ட ஆரோக்கிய நிலையிலுள்ள 69 ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மூன்று பந்துகளை மாறிமாறி மேலே எறிந்து கீழே விழாமல் பிடிக்கும் யுக்தி தொடர்பில் கற்பிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி வயோதிபர்கள், இளைஞர்கள் போன்று குறைந்தது 60 செக்கன் வரை பந்துகளை கீழே விழவிடாமல் பிடித்ததாக மேற்படி ஆய்வுக்குத் தலைமை தாங்கிய ஹம்பேர்க் பல்கலைக்கழகத்தின் நரம்பியல் பிரிவைச் சேர்ந்த ஜனினா போய்கே தெரிவித்தார்.

மேற்படி 69வயோதி பர்களும் இதற்கு முன் பந்துகளை இவ்வாறு எறிந்து பிடிக்கும் தந்திர விளையாட்டைக் கற்றவர்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பாகிஸ்தான் மலைப்பிராந்திய மோதல்களில் 47 பேர் பலி

(ஷவார்)

பாகிஸ்தானின் குர்ராம் மலைப் பிராந்தியத்தில் இடம் பெற்ற மோதல்களில் இரு போராளிக் குழு கட்டளைத்தளபதிகள் உட்பட 47 பேர் பலியாகியுள்ளனர்.

இதனையடுத்து தமது எதிராளிக் குழுக்களின் கட்டுப்பாட்டிலிருந்த அராவலி, ஜீலமே மற்றும் சார்டெவாரி ஆகிய கிராமங்களை தூரி இனப் போராளிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இம் மோதல்களில் மௌலானா அக்பர் தீன் மற்றும் ஹஸ்ரத் அலி ஆகிய போராளிக் குழு கட்டளைத் தளபதிகள் பலியாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. (ஓ)

# முஷாரப்பின் பதவி விலகல் ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி

### மக்கள் கட்சி தலைவர் பிலாவல் பூட்டோ

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் பதவியிலிருந்து விலகியமையானது ஜன நாயக சக்திகளுக்குக் கிடைத்த வெற்றியென பாகிஸ்தானின் ஆளும் கூட்டணிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஜனநாயக ஆட்சிக்கு இருந்த பெரிய முட்டுக்கட்டை நீக்கப் பட்டுவிட்டதாக பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ ஊடகங்களிடம் கூறினார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதாக முஷாரப் அறிவித்தவுடன், பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் நவாஸ் ஷரீப் தலைமையிலான கட்சியைச் சேர்ந்தவர்கள் கட்சியின் இணைத்தலைவர் ஆசிப் அலி சர்தாரி வீட்டு முன்பு கூடி தங்கள் மகிழ்ச்சியைத் வெளிப் படுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், பர்வேஷ் முஷாரப்பை பாதுகாப்பாக வெளிநாட்டுக்கு அனுப்புவதா அல்லது இல்லையாவென கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் முடிவு செய்வார்களென பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி கூறினார்.

கடந்த 9 ஆண்டுகளில் முஷாரப் செய்த தவறுகளுக்காக அவரை தண்டிக்க வேண்டுமென பாகிஸ்தான் முன்னாள் பிர தமர் நவாஸ் ஷரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-என் கட்சி வலியுறுத்தி வருகின்றது.

இந்நிலையில் பாகிஸ்தானின் அடுத்த ஜனாதிபதியாக பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்தவரே தேர்ந்தெடுக்கப்படுவாரென கட்சித் தலைவர் பிலாவல் பூட்டோ கூறியுள்ளார். (ஓ)

# ஆற்றுவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது பஸ் 50 பயணிகள் நீரில் மூழ்கி பலி - ஹெய்ட்டியில் சம்பவம்

(ஹெய்ட்டி)

ஹெய்ட்டியைத் தாக்கிய பே புயலையடுத்து பெருக்கெடுத்த ஆறொன்றை கடந்து செல்ல முயன்ற பஸ்ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில், சுமார் 50பேர் வரை பலியாகியுள்ளனர்.

தென் மேற்கு மாகாணமான கிரான்ட் அன்ஸியிலுள்ள றிவியரே கிளேஸ் ஆற்றுக்கு அருகில் ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்ற இந்த அனர்த்தத்தின்போது, பலர் காப்பாற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிரான்ட அன்ஸி மாகாணத்தின் மிகப் பெரிய நகரான ஜெரேமியை நோக்கிச் சென்ற மேற்படி பஸ்ஸில், அனர்த்தம் இடம் பெற்ற சமயம் சுமார் 80 பேர் வரை பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது.

# இந்தியாவில் மருத்துவ சோதனையில் 49 குழந்தைகள் உயிரிழப்பு

இந்தியாவின் முன்னணி மருத்துவ ஆய்வு நிலையம் ஒன் றில் கடந்த இரண்டரை வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரீட்சார்த்த நடவடிக்கை ஒன்றின்போது குறைந்தது 49 குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

நோய்த்தடுப்பு மருந்துகளின் பாது காப்பு குறித்த கேள்விகளுக்கு விடை காணும் முகமாக தொடர்ச்சியாக நடத்தப்பட்ட சோதனைகளின்போது இந்த மரணங்கள் இடம் பெற்றதாக அனைத்து இந்திய மருத்துவ விஞ்ஞான ஆய்வு நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

ஆனால் நடந்த அனைத்து உயிரிழப்புக்களுக்கும் மருத்துவ சோதனையைக் காரணம் கூறமுடியாது என்றும் சில குழந்தைகள் உயிர்கொல்லி நோய்களால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இறந்தவற்றில் பல ஏழைக் குழந்தைகள் என்றும் இந்த மருத்துவ சோதனையின் பிரதிபலன்களை புரிந்துகொள்ள முடியாதவர்களைக் கொண்ட படிப்பறிவு இல்லாதவர்களைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவை என்றும் விமர்சகர்கள் கூறுகிறார்கள். (ஓ)

### உலக தரிசனம்

# ஜோர்ஜியாவில் இருந்து ரஷ்யப் படைகள் பின்நகர்வு

(மாஸ்கோ)

பிரான்ஸ் நாட்டின் மத்தியஸ்தத்தில் ஏற்படுத்தப்பட்ட அமைதித்திட்டத்தின் அடிப்படையில் தமது படைகள் ஜோர்ஜியாவில் இருந்து வெளியேறத் தொடங்கியுள்ளதாக ரஷ்ய இராணுவம் கூறுகிறது.

தெற்கு அசெட்டியாவை நோக்கியும் மற்றும் பிரிந்துபோன பிராந்தியங்களைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயங்களை நோக்கியும் தமது படைகள் நகர ஆரம்பித்துள்ளதாக, ரஷ்ய படை அதிகாரிகளின் துணைத் தலைவரான ஜெனரல் அனடோலி நொகாவிட்ஸின் கூறியுள்ளார்.

இது ஒரு படைவாபஸ் அல்ல என்றும் வெறுமனே ஒரு பின்நகர்வு மாத்திரமே என்றும் அவர் கூறியுள்ளார். பிரான்ஸ் மத்தியஸ்தத்திலான உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது இதுவே என்றும் அவர் கூறினார்.

ஜோர்ஜிய தலைநகர் திபிலிசிக்கு அருகே சில இராணுவ செயற்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்ற போதிலும் அங்கு படை பின்வாங்கல் எதனையும் காணக்கூடி யதாக இருக்கவில்லை என்று அந்தப் பகுதியில் இருக்கும் பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஜோர்ஜியாவில் இருக் கின்ற ரஷ்யர்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பும், அதிரடி நடவடிக்கையின் மூலமே எதிர் கொள்ளப்படும் என்று ரஷ்ய அதிபர் மெட்வெ டேவ் கூறியுள்ளார். (ஓ)

# விடைத்தாள் திருத்தும் பணிகளை அவசரமாக முன்னெடுப்பதை நிறுத்தும்படி வலியுறுத்து

## இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர்

(கொழும்பு)

ஆசிய கண்டத்தில் இலங்கையானது கல்வித்துறையில் மிளிர்ந்து வரும் நிலையில் எமது உயர்தர வகுப்பு மாணவ, மாணவியரின் கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும் வகையில் அரசும் கல்வி அமைச்சும் சில குளறுபடியான செயற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

உயர்தர பரீட்சை விடைத் தாள்களை தகுதியற்றவர்களால் அவசர அவசரமாகவும் ஏனோ தானோ என்ற மனப்பான்மையுடனும் திருத்தும் பணிகள் இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளமையானது முழுக்க முழுக்க எமது மாணவ சமுதாயத்தின் கல்வியுடனும் அவர்களது எதிர்காலத்துடனும் விளையாடும் செயலாகும். இதனை உடனடியாக நிறுத்தும் படியே நாம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கூறிக்கொள்கின்றோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பில் உள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கடந்த 11 வருடங்களாக சம்பள முரண்பாடுகள் இங்கு நிலவி வருகின்றன. ஜனாதிபதியும் கல்வியமைச்சும் இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதாக பல தடவைகள் உறுதி மொழிகள் வழங்கியும் அவை எவையுமே நிறைவேற்றப்பட வில்லை.

பொதுவாகவே உயர்தரப் பரீட்சைகள் நிறைவுற்றதுமே பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படும் முன்னர்கலந்துரையாடல் ஒன்று வைத்து தகுதியான எவரெவர் விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்படு வது என்பது குறித்து தீர்மானிக்கப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

மேலும் இவ் விடைத்தாள்கள் திருத்தும் பணிகளில் ஈடுபடும் கல்வி அதிகாரிகளது குடும்பங்களைச் சேர்ந்தவர்களது பிள்ளைகள் குறித்த சமயத்தில் பரீட்சாத்திகளாக இருந்தால் அவ்வதிகாரிகள் விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட முடியாது என்பது முக்கிய நியதியாகும் இது இவ்வளவு காலமும் பின்பற்றப் பட்டு வரும் முக்கிய நியதியாகும்.

இது இவ்வாறு இருக்கையில் இம்முறை உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை தகுதியற்றவர்களால் அவசர அவசரமாகவும் ஏனோதானோ என்ற மனப்பான்மையுடனும் திருத்தும் பணிகள் இம்மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள் ளமையானது முழுக்க முழுக்க எமது மாணவர் சமுதாயத்துடனும் அவர்களது வழமான எதிர்காலத்துடனும் விளையாடும் செயலாகும்.

ஆசியக் கண்டத்தில் இலங்கையானது கல்வித் துறையில் மிளிர்ந்து வரும்நிலையில் எமது உயர்தரவகுப்பு மாணவ, மாணவியரின் கல்வி வளர்ச்சியை பாழ்படுத்தும் வகையில் இப்போதைய அரசும் கல்வி அமைச் சும் இதுபோன்ற சில குளறுபடியான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை நிறுத்தும் படியே நாம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கூறிக்கொள்கின்றோம். போகிற போக்கைப் பார்த்தால் இந்நாட்டில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவது போன்று ஆசிரியர் சமூகமும் இன்றைய அரச தரப்பினரால் அச்சுறுத்தப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதையே இடம் பெறும் சம்பவங்கள் உணர்த்துகின்றன. மஹிந்த அரசும் கல்வி அமைச்சும் எமது ஆசிரிய சமூகத்தை முட்டாள்களாக்க முனைவதோடு மாணவ சமூதாயத்தின் வாழ்க்கையுடனும் விளையாடத் தொடங்கி விட்டது.

இப்படி அவசர அவசரமாக தகுதியற்ற அதிகாரிகளால் பரீட்சை விடைத் தாள்கள் திருத்தப்படுவதானது மாணவரின் பல்கலைக்கழக நுழைவுக்கும் தெரிவுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும். எனவே, அரசு உடன் இதில் தலையிட்டு உயர்தர பரீட்சை விடைத் தாள் திருத்தும் பணிகளில் அவசர அவசரமாக ஈடுபடுவதை நிறுத்தும் படி நாம் வலியுறுத்துகின்றோம் என்றார். ஓ

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### நன்னாரி

Botanical Name - Hemidesmus Indicus
Family - Asclepiadaceae
Engl-Indian Sarasaparilla
Sinh-Iramusu

இதன் வேர் நல்ல மணமுடையதால் இதற்கு நன்னாரி என்ற பெயர் கிடைத்திருக்கின்றது. இது சுமார்ஒரு மீற்றர் தூரம் வரைக்கும் பல கிளைக் கொடிகளுடன் தரையோடு ஒட்டிப் படரும். கணுக்களில் வேர் விடுவதில்லை. கொடி சுமார் 2, 3 மி.மீ பருமனும் சிறிது கருமை கலந்த சிவப்பு நிறமும் உடையது. கொடி இலைகளைக் கிள்ளினால் பால் வரும். கலக்கவுள்ள கணுக்க ளில் இரண்டு இலைகள் எதிர் எதிராக இருக்கும் கத்திபோல் நீண்டுள்ள இலை சுமார் 3/4 செ.மீ அகலமும், 4, 5 செ.மீ நீளமும் உள்ளது. இலையின் நடு நரம்பு நாமம் போன்ற நல்ல வெள்ளைக் கோடு ஒன்றை உடையது. நல்லமணமுடைய இதன்வேர் அதிக நீளமாகவும், பக்கம் நோக்கி பல கிளைகளுடன் படர்ந்திருக்கும். சுமார் 1/2 முதல் 1 செ.மீ குறுக்களவுள்ளதாக இருக்கும். வேரின்பட்டை அதிகம் கனமுடையது. மலர்கள் சிறியவை பச்சை-கருஞ்சிவப்பு நிறமுடையவை. மஞ்சரிகள் இலைக் கோணங்களில் சோடியாகக் காணப்படும். கனிகள் இரு பிரிவு பிளவுடையவை. மெல்லியவை விதைகள் முட்டை வடிவானவை. கறுப்பு நிறங்கொண்டவை. ஆடி, ஆவணி மாதங்களில் மலர்ந்து ஜப்பசி, மார்கழி, மாதங்களில் கனிகள் தோன்றும். இது பல வாண்டுகள் உயிர்வாழும்.


### கிடைக்கும் இடமும் பயிரிடுதலும்

யாழ்ப்பாணத்தில் பொதுவாக வேலி யோரங்களிலும், தோட்ட வெளி ஓரங்களிலும் பரம்பல் கூடுதலாக அவதானிக்கப்படுகின்றது. இதன் வேரோடு கொடியைப் பிடுங்கி வந்து நட்டுப் பயிராக்கலாம்.

இந்தியாவில் ஒருசில குறவர்கள் காடுகளில், மலைகளில் இருந்து இந்த வேரைப் பச்சையாக வெட்டி எடுத்துவந்து விற்பதை ஒரு சில இடங்களில் காணலாம்.

### மருத்துவப் பயன்கள்

♦ நன்னாரி வேரை பறித்தவுடன், மண் நீக்கி அலச வேண்டும். பின்னர் அதன் மேலுள்ள கறுப்புத் தோலையும், உள்ளே நடுவில் உள்ள நரம்பையும் நீக்கிவிட்டு பயன்படுத்த வேண்டும்.



♦ அலசி சுத்தம் செய்த பச்சை நன்னாரிவேர் 20கிராமை முதல் நாள்இரவில் 1/4 லீற்றர் காய்ச்சிய நீரில் ஊறவைத்து மூடிவைக்க வேண்டும். காலையில் எடுத்து கசக்கி பிழிந்து வடிகட்டி, பனங் கற்கண்டு அல்லது தேன் கலந்து, அருந்தவும். தோல், நரம்புகளுக்கு சுறுசுறுப்பு தரும். உடலை உரமாக்கும்.

♦ காய்ந்த நன்னாரி 25 கிராம் எடுத்து, இரவில் ஊறவைத்து காலையில் வடிகட்டி சாப்பிட வேண்டும். 2மணிநேரம் வெண்ணீரில் ஊற வைத்து வடிகட்டியும் அருந்தலாம். இரத்தத்தை சுத்திசெய்யும் பசியைத் தூண்டும்.

### நன்னாரி தேனீர்

25 கிராம் இடித்து தூள்செய்த நன்னாரி வேரை 1/4 லீற்றர் நீரிலிட்டு காய்ச்சி 100 மில்லி லீற்றராக கசாயம் வற்றி விடும்போது இறக்கி வடிகட்டி விடவும். இதனுடன் பால், சர்க்கரை சேர்த்து காலை, மாலை அருந்த இனிமையாக இருக்கும். தோல்வியாதிகள், தாகம், உடற்சூடு தீரும். உடல்பலம் பெறும். சிறுநீர் நன்கு வெளிப்படும். குழந்தைகள் முதல் வயோதிபர் வரை யாவரும் பயன்படுத்தலாம்.

### நன்னாரி சர்பத்


நன்னாரி வேர் 200 கிராம் எடுத்து 1 லீற்றர் கொதிக்கும் வெண்ணீரில் இட்டு 4 மணி நேரம் ஊற வைக்க வேண் டும். அதன் பின் அடுப்பில் இட்டுக் காய்சி அரை லீற்றராக வற்றிவரும் போது இறக்கி வடிகட்டிக்கொள்ளவும் இதனுடன் 400 கிராம் சர்க்கரை விட்டுக்காய்ச்சி பதமாக இறக்கி கொள்ள சர்பத் ஆகிவிடும்.

30 மில்லிலீற்றர் சர்பத்தும் 60 மில்லிலீற்றர் தண்ணீரும் கலந்து அருந்த தாகம், பிரமேகம் வெள்ளை, சிறுநீர் எரிச்சல் தீரும். உஷ்ண காலத் திற்கு உகந்த பானம். நரம் புரமாக்கியாக வும் அமையும்.

உலர்ந்த நன்னாரி வேர் களை நடுநரம்பு நீக்கி இடித்து அரித்து (பல முறை) வைத் துக் கொள்ளவும்: 1-2 கிராம் காலை, மாலை பாலில் அருந்த மேற் கூறிய பயன்களைத் தரும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

### நல்லூரான் திருவடிக்கு இன்று பதினாறாம் திருவிழா



### நல்லைச் சுடர்.

அழகின் நிகரே அமுதத் தமிழே
குருவே குகனே குன்றின் எழிலே
குழுகு மயிலில் உலவும் முருகே
கனிவாய் மனமே கருணைக் கடலே
மழவா மயூரா மாதங்கன் சோதரா
மாலின் மருகா குறவள்ளி மணாளா
எழுவாய் ஏற்றம் மிகவே நல்லைச்
சுடராய் மிளிரும் சிவ சண்முகனே

*அல்வாயூர் சி.சிவநேசன்*

### சற்று நீ இரங்கிடாயோ சண்முகா எம்மைக்காக்க!

கற்பூ ரதீபம் காட்டிக்
கழுத்தினில் மாலை சாத்தி
பற்றுடன் பாமா லைபாடிப்
பற்றியே தொழுது நின்றோம்
அற்புதம் புரியும் நல்லூர்
அழகனே அடியார்க் காகச்
சற்றுநீ இரங்கி டாயோ
சண்முகா எம்மைக் காக்க

*சிந்துபுரக் கவிராயர்.*

### உன்னையே சரணடைந்தேன் இறைவா

நல்லையில் வாழும் முருகா
எம் தொல்லையைத் தீர்ப்பாய் குமரா
உன்னையே சரணடைந்தேன் இறைவா
இனி நீயின்றி நானில்லை அழகா

*சுப்பிரமணியம் ஜெயரூபன் -பருத்தித்துறை*

### அருள்வாய் நல்லை முருகா

கண்களில் நீருடன் கைதொழும் ஏழையை
கந்தா நீ பாலித்தால் கவலைகள் தீரும்
(கண்களில்)
வாடிடும் என் முகத்தை வனவேலன் பார்க்காயோ
வதங்கிடும் என் மனதை வடிவேலன் அருளாயோ
ஏன்தான் என்னமும் சோதனை
நான்தான் வாழ்க்கையில் வேதனை
(கண்களில்)
அன்னையின் வாயில் என்றும் ஆறுமுகன் நாமம் எல்லோ
அலைந்திடும் வாழ்க்கை கொண்ட ஆனந்த ஜோதி எல்லோ
அடியேன் அமைதி இல்லை
அருள்வாய் நல்லை முருகா
(கண்களில்)

*சி.ஜெகன்-பெரியபுலோ*

### நல்லூர் நாயகனே வேல்முருகா!

நல்லூரில் வந்துதித்த நாயகனே
வேல்முருகா
உனை நம்பியோர்க்கு அருள் புரிவாய் நாயகனே
வேல்முருகா
பழத்திற்காக பழனி சென்ற பாலகனே
வேல்முருகா
ஞானப் பழம் தானே நீ ஐயா பழமெதற்கு
வேல்முருகா
சிவனுக்கு உபதேசித்த செல்வமே
வேல்முருகா
சிவ சுப்பிரமணியம் பேர் கொண்ட தெய்வமே
வேல்முருகா
குமர மாலை வீற்றிருந்த குமரனே
வேல்முருகா
வள்ளிக் குஞ்சரியை மணம் புரிந்தகுமரனே
வேல்முருகா

*திருமதி த.ஜமுனா -சுதுமலை*

# மாகாண சபைத் தேர்தல்களில் ஐ.தே.க. தோல்வியடையும்

## அமைச்சர் டலஸ் நம்பிக்கை

(கொழும்பு)

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் 13 காரணங்களால் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடையும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் இரு மாகாண சபைகளுக்கும் நிறுத்தப்பட்டிருக்கும் முதலமைச்சர் வேட்பாளர்கள் கொழும்பிலிருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள் என்பதால் அவர்களை ஏற்றுக்கொள்ள அப்பகுதி மக்கள் தயாராக இல்லையென நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மந்தப் போக்கிலான தேர்தல் பிரசாரக் கூட்டங்கள், அக்கட்சியின் 42 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமை, அக்கட்சியின் தலைமைத்துவத்துக்கு காணப்படும் எதிர்ப்பு, கட்சிக்குள் ஒற்றுமையின்மை உட்பட 13 காரணங்களால் எதிர்க்கட்சி மாகாணசபைத் தேர்தல்களில் தோல்வியைத் தழுவும் என அமைச்சர் தெரிவித்தார்.

இரண்டு வருடங்கள் ஆட்சியிலிருந்த ரணில் விக்கிரமசிங்க இந்த மாகாணங்களில் எந்த அபிவிருத்தியையும் முன்னெடுக்கவில்லையெனவும் அவர்கள் நகர மக்களை மையமாகக் கொண்டே அபிவிருத்திகளை முன்னெடுக்கின்ற போதும் கிராமப் புறங்களில் தமது அரசாங்கமே அபிவிருத்திகளை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிராந்தியத் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்துகொள்கின்றமை, ஸ்திரமில்லாத தேர்தல் உறுதிமொழிகள், மதத் தலைவர்களின் ஆதரவு எதிர்க்கட்சிக்கு இன்மை, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கட்சிகளே ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளமை போன்றவையும் ஏனைய காரணங்களாக அமைந்துள்ளன என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரசாரங்கள் நாளை நள்ளிரவுடன் முடிவுக்கு கொண்டுவரப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்க அறிவித்துள்ளார். (ச-5)

# பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பின் இராஜினாமா உணர்த்தும் காதை

கடவுளை ஏமாற்ற நினைக்கிறவன் ஏற்கனவே தன்னை ஏமாற்றிவிட்டான். -இத்தாலி

வலம்புரி

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷராப் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இராணுவத் தளபதியாக இருந்த முஷராப், நவாஸ் ஷெரீப்பின் ஆட்சியை கைப்பற்றி தன்னை ஜனாதிபதியாக பிரகடனப்படுத்திக் கொண்டார்.

முஷராப்பின் கொடூரமான ஆட்சியில் பாகிஸ்தானில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்புகள், வன்முறைகள், கலவரங்களால் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் பலியாகினர்.

நீதிமன்றங்களின் செயற்பாடுகளுக்கு தடை விதித்து சில நீதிபதிகளை பணி நீக்கமும் செய்தார்.

முஷராப்பின் சர்வாதிகாரத்தால் பாகிஸ்தான் அழிந்துபோய் விடுமோ என்ற ஏக்கத்தின் மத்தியில் பொதுத் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு அமெரிக்கா கடுமையான அழுத்தம் கொடுத்தது.

அமெரிக்காவின் அழுத்தத்திற்கு ஈடுகொடுக்க முடியாத முஷராப் பொதுத் தேர்தலை நடத்தி நாடாளுமன்ற அரசு அமைப்பதற்கு உடன்பட்டார்.

ஜனாதிபதி முஷராப்பின் கொடுங்கோல் ஆட்சியை ஒழிப்பதில் அர்ப்பணிப்புடன் பங்காற்றிய பெனாசீர் பூட்டோ சுட்டுக் கொல்லப்படுவதற்கும் முஷராப்பே காரணமாக இருந்தார்.

இருந்தும் பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதற்காக உயிரை விடவும் தயார் என்ற பெனாசீர் பூட்டோவின் உன்னதமான தியாகம் பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகம் மிளிர்வதற்கும் ஜனாதிபதி முஷராப்பின் சர்வாதிகாரம் முடிவுக்கு வருவதற்கும் வழிகோலியது எனலாம்.

இதற்கு மேலாக, நவாஸ் ஷெரீப் மற்றும் பெனாசீரின் கணவர் ஆகியோருக்கும் இடையே இருந்த ஒற்றுமையும் முஷராப்பை ஜனாதிபதிப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு ஜனநாயக ரீதியில் கையாண்ட அணுகுமுறையும் உலக அனுபவமாக அமைகின்றது.

அரசியல் புலத்தில் சர்வாதிகார ஆட்சி அதிகாரத்தில் நீதியை, நியாயத்தை, ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக எதிர்க்கட்சிகள் ஒன்று சேரும்போது அங்கு ஜனநாயகம் உருப்பெறுவதற்கு நிச்சயம் வழி வகுக்கும் என்பதற்கு முஷராப்பின் இராஜினாமாவும் நவாஸ் ஷெரீப் மற்றும் பெனாசீரின் கணவர் ஆகியோரின் ஒற்றுமையும் காரணம் என்ற உண்மை ஜனநாயகம் வீழ்ச்சி காணும் நாடுகளில் உள்ள எதிர்க்கட்சிகளுக்கு சாலப் பொருந்துவதாகும்.

# யாழில் தீயணைப்புச் சேவையை மேம்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தீ அனர்த்த இடர் வேளைகளின்போது மீட்டு மிக அத்தியாவசிய உதவியாக எதிர்நோக்கப்படும் தீயணைப்புச் சேவையினை மறுசீரமைத்து மேம்படுத்த சமூக சேவைகள் அமைச்சரும், வடமாகாண விசேட செயலணித் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது யாழ். மாநகரசபையிடம் மட்டுமே தீயணைப்புச் சேவைப்பிரிவு இருக்கின்றபோதிலும் அச்சேவையானது முழுமையாக செயற்பட போதிய வளங்கள் இல்லாத நிலைமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனேடிய உதவித்திட்டத்தின் கீழ் 1988 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட தீயணைப்பு இயந்திரம் உரிய உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளமை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபரினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி ஒரு தீயணைப்பு இயந்திரம், இரண்டு மீள உறிஞ்சி கொள்கலன்கள், இரண்டு தண்ணீர் தாங்கிகள் மற்றும் தீயணைப்பு இயந்திரத்திற்குரிய ஒரு தொகுதி உதிரி உபகரணங்கள் என்பன உடனடியாக தேவையாக உள்ளன.

இவற்றிக்கு மேலதிகமாக மின்பிறப்பாக்கி ஒன்றையும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தேவையும் அவசியமாகின்றது.

யாழ். பொதுமக்களினாலும், வர்த்தகர்களினாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகளையடுத்து யாழ். தீயணைப்பு சேவையின் அவசியம் குறித்து கூடிய அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க அவர்களுடன் இவ்விடயம் தொடர்பாக தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றார் என தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

# வன்னி மக்களை விடுவிப்பதற்கு சர்வதேச அழுத்தம் தேவை

## அரச சமாதானச் செயலகம் கோரிக்கை

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களை விடுவிப்பதற்கான அழுத்தத்தை சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்கவேண்டுமென அரசாங்க சமாதானச் செயலகத்தின் தலைவர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

வன்னிப் பகுதியிலுள்ள மக்களை விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டியிருக்கும் அவர் அங்குள்ள மக்களை பாதுகாக்க வேண்டிய முழுப்பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருப்பதால், இடம்பெயர்ந்த மக்களை அங்கிருந்து வெளியேற்றி மீளக் குடியமர்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்திருப்பதாகக் கூறினார். அதேநேரம் வன்னிப் பகுதியில் இடம்பெயர்ந்து அங்கிருந்து வெளியேற முடியாதிருக்கும் மக்கள் போதியளவு மனிதநேய உதவிகளைப் பெற்றுக் கொள்வதாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் மக்களுக்காக அத்தியாவசியப் பொருட்களை அனுப்பும் ஒரே நாடு இலங்கை எனவும் அவ்வாறு அனுப்பப்படும் பொருள்களில் இருந்து விடுதலைப் புலிகள் நன்மை அடைகிறார்கள் என்பது தெளிவாகத் தென்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-5)

# பெருந்திருவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

விழாவில் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், 28ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (ஓ)

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை ... பால விநாயகா ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6.05 மணிக்கு நடைபெறவுள்ளது.

... கிழமை முதல் ... வரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடி

## முன்னதாகவே பல் முளைக்கும் குழந்தை தாமதமாகப் பேசத் தொடங்குமா?

இரு குழந்தை பிறந்தால் அதன் மழலைச் சொற்களைக் கேட்க எல்லோருக்கும் ஆவல்தான். தெளிவற்ற குரலில் பிழையான உச்சரிப்புடன் பேசும் குழந்தைகளை மறுபடியும் பெற்றோர்களும் உறவினர்களும் தூண்டுவதைக் காணலாம்.

சில குழந்தைகளுக்கு முன்னதாகவே பல் முளைக்கும், சில குழந்தைகளுக்கு தாமதமாகவே பல் முளைக்கும். முன்னதாகப் பல்முளைக்கும் குழந்தை தாமதமாகப் பேசும் என்று ஒரு நம்பிக்கை உண்டு. சில குழந்தைகளைக் காணும்போது இந்த நம்பிக்கை சரி என்றே தோன்றும். முன்னதாகப் பல் முளைக்கும் குழந்தை தாமதமாகவே பேசத் தொடங்குகின்றது. இதன் காரணம் என்ன என்று யாரும் கவலைப்படுவதில்லை.

ஆனால் இதன் பின்னால் தெளிவான காரணமுண்டு. பேசுவதற்கு வேண்டிய முக்கிய உறுப்பு நாக்கு. பல் முளைத்து விடும் போது நாவுக்குத் தடங்கல் எதிர்கொள்ள வேண்டி வருகின்றது. முன்னதாகப் பல் முளைக்கும் குழந்தை தாமதமாகப் பேசுவதன் காரணம் இதுவே.

80
Silver, Black Casing
40GB Hard Disk,
Keyboard & Optical Mouse Speaker

Missed the E-faculty! ...
Director-International Admissions, ... Salem-636 ... Tamilnadu, INDIA

V EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED
Mr. S. Jeyakanth - TP 07 ... Email - ...consultancy@gmail.com

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை புரிவோரை ஆசிரிய உதவியாளர்களாக நியமிப்பதற்கு வட மாகாண விசேட செயலணித் தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஏற்கனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் வழங்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டமைக்கு அமைய கூடிய தகைமையுடைய 171 தொண்டர் ஆசிரியர்கள் வட மாகாணத்தில் முன்னுரிமை அடிப்படையில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இந் நிலையில் நிரந்தர நியமனம் கிடைக்காத ஏனைய தொண்டர் ஆசிரியர்களையும் ஆசிரிய உதவியாளர்களாக இணைக்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுடன் விரிவாகக் கலந்துரையாடியதை அடுத்து இந் நியமனம் தொடர்பாகக் கல்வி அமைச்சரினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

தமது நிரந்தர நியமனம் தொடர்பாக நேரிலும் தொலைபேசி மற்றும் தொலைநகல் ஆகியவற்றினூடாகவும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமாகத் தொடர்பு கொண்டு தொண்டர் ஆசிரியர்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் கூடிய அக்கறை எடுத்த அமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் இந் நியமனங்கள் வழங்கப்பட ஏற்பாடாகியுள்ளமை விசேட அம்சமாகும். (ச-5)

# காங்கேசன்துறை மின் நிலையத்திற்கு யாழ்.அரச அதிபர் நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

சீன நிறுவனத்தினால் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டு வரும் மின் நிலையம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் க. கணேஷ் நேரில் சென்று நேற்றுப் பார்வையிட்டுள்ளார்.

அங்கு சென்ற அரச அதிபர் மின்சார சபை அதிகாரிகளுடனும் சீனக் குழுவினருடனும் இது தொடர்பாக ஆராய்ந்துள்ளார். மின் நிலையத்திற்கான கட்டட நிர்மாண வேலைகள் நடைபெற்று வருவதால் அவை பூர்த்தியடைந்ததும் சீனாவிலிருந்து எடுத்து வரப்பட்ட 6 மின் பிறப்பாக்கிகளும் பொருத்தப்பட்டு மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் அரச அதிபர் கூறினார்.

விரைவில் யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான மின்சாரம் முழுமையாக வழங்கப்படும் என மின்சார சபையினர் உறுதியளித்துள்ளதாக அரச அதிபர் வலம்புரிக்குத் தெரிவித்தார். (எ-5)

## விடுதலைப்...

புதிய போராளிகளோடு முன்னாள் போராளிகளையும் இணைந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

இவ் வேண்டுகோளையடுத்து நேற்றுப் பல போராளிகள் அரசியல்துறையின் பிரதேச செயலகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வருகின்றனர் என விடுதலைப் புலிகளை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை கிளிநொச்சியில் மக்கள் படைக் கட்டுமானப் போர்ப் பயிற்சி ஆரம்பமாகியுள்ளது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், வர்த்தகர்கள், கூட்டுறவாளர்கள் எனப் பலர் இந்தப் படையில் இணைந்துள்ளனர். (ச-5)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

ஜி.சி.ஈ.உயர் தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாகவும் 12 ஆயிரம் ஆசிரியர்கள் இப் பணியில் ஈடுபடுவர் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

ஆசிரியர்களின் சில தொழிற்சங்கங்கள் விடைத்தாள் திருத்தும் பணியைப் புறக்கணிக்கப் போவதாக முன்னர் அறிவித்தன. எனினும் அந்தத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் நாம் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து இப் பணியில் முழு ஒத்துழைப்பு வழங்க அந்தத் தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்தன என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 62 பாடசாலை மாணவர்களும் 94 ஆயிரத்து 754 வெளி மாணவர்களும் இம் முறை ஜி.சி.ஈ. உயர் தரப் பரீட்சை எழுதினர்.

இவர்களுக்காக வடக்குக் கிழக்கு உட்பட ஆயிரத்து 818 பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன என்றும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## வன்னி...

மக்களின் துயரினைப் போக்குவது அவசியமானது என யாழ்.பல் கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாடு தழுவிய ரீதியில் ஏற்பட்ட இடம்பெயர்வின்போது எம்மைத் தாங்கிய உறவுகள் இன்று மருத்துவ, இருப்பிட, உணவுத் தேவைகள் எனப் பல தேவைகளுக்காக ஏங்கி நிற்கின்றனர்.

அவர்கள் அனைவரதும் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வது இயலாதது எனினும் அரசு தனது நலன்சார் திட்டங்களையும் அனர்த்த நிவாரண உதவிகளையும் பாரபட்சமின்றி வழங்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அரசாங்கம் மக்களைப் பயமுறுத்தி வாக்குகளைப் பெற முயல்கிறது- ஜே.வி.பி.

(கொழும்பு)

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் அரசு மக்களை பயமுறுத்தி வாக்குகளைப் பெற முயல்கிறது. ஆனால் சப்ரகமுவ மாகாண மக்கள் இவை அனைத்தையும் பொறுமையுடன் அவதானித்துக் கொண்டு இதற்குப் பதிலடி கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

மக்களது சுதந்திரமான வாக்களிக்கும் உரிமையை அரசு தடுத்து நிறுத்த முயல்கிறது. அநுராதபுரம் பிரதேசங்களில் காணப்படும் மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள் அரசு ஆதரவாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன என ஜே.வி.பியின் வட மத்திய மாகாண வேட்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

தேர்தல் செலவினங்கள் மக்களின் மேல் சுமத்தப்படுகின்றது. அதைப் போல் பெற்றோல் போன்ற ஏனைய செலவீனங்களும் மக்களின் மேல் சுமத்தப்படுகின்றன.

சில வாகனங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக டபிள்யூ.பி.சி.-2008-2009 எனப் பெயரிடப்பட்டுள்ளன என ஜே.வி.பியின் வட மத்திய மாகாண வேட்பாளர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார். (ச-5)

## தேர்தல்...

சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதற்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸநாயக்க பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (எ-5)

## யாழ்...

வி.இராசையா தெரிவித்தார். யாழ்ப்பாண மாணவர்களுக்கான உணவு வசதிகளை வட மாகாண செயலணிக் குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவா னந்தா மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை 177 மாணவர்கள் இன்று யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குப் புறப்படவுள்ளனர். (ச-5)

## பிரபாகரனின் மறைவிடம்...

வருவதாகப் புலிகள் தவறான தகவலைப் பரப்பி வருகின்றனர்.

ஆனால் சிவிலியன்களுக்கு இழப்புக்கள் ஏற்படாமல் விமானப் படையினர் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றனர். எமது விமானப் படைக்குப் பலமான பாதுகாப்பு வலயமைப்பு இருக்கின்றது.

புலிகளின் தாக்குதல்களைத் தடுப்பதற்குப் போதுமான பலமும் விமானப் படையினரிடம் இருக்கின்றது. புதிய யுத்த ஜெட் விமானங்களை உபயோகிக்கவும் விமானப் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அநுராதபுர விமானப் படை முகாம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விமானப் படைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

## இடம்பெயர்ந்...

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்திருப்பவர்கள் உள்நாட்டிலுள்ள ஏனைய மக்களைப் போன்று கௌரவமிக்க சுதந்திரமான வாழ்க்கையை வாழ முடியாதவர்களாக இருப்பதாகவும் மனித உரிமைகள் ஆணையகம் குறிப்பிடுகின்றது.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கான சட்ட மூலம் ஒன்றை அது வரைந்திருக்கின்றது.

இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் அதனைக் கையளித்திருப்பதாக மனித உரிமைகள் ஆணையகம் தெரிவித்திருக்கின்றது. (ச-5)


நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

Pentium 4 மாபெரும் மெகா ஸ்பெஷல்

17" Dell Black Moniter,Intel Mother Board, Intel Processor 1.6, 256 Ram, 32 MB VGA Card, Silver,Black Casing CD ROM,40GB Hard Disk, Keyboard & Optical Mouse Speaker




குறிப்பு:- மாபெரும் இச்சலுகை இன்றுடன் முடிவடைகின்றது

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி. (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக) யாழ்ப்பாணம்


## வட பகுதி வைத்தியசாலைகளில்...

படையினருக்குத் தேவையான வைத்தியர்களின் குறைபாடு குறித்து ஆராய்ந்து உட னடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி சுகாதார அமைச்சுக்குப் பணித்துள்ளார். அலரி மாளிகையில் நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சுகாதார அமைச்சின் முக்கியஸ்தர்களுடனான மாநாட்டின் போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில், வட பகுதியிலுள்ள வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள் உட்பட குறைபாடுகள் தொடர்பாகத் தேடிப் பார்த்து அனைத்தையும் நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன் இறக்குமதி செய்யப்பட வேண்டிய மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் அவசரமாகக் கவனம் செலுத்தி அவற்றைத் தாமதமின்றி இறக்குமதி செய்ய வேண்டும்.

படை நடவடிக்கைகளின்போது காயமடையும் படைவீரர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காகக் குடாநாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் விசேட பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படுவதுடன் வைத்தியர்களின் குறைபாடுகள் தொடர்பாகப் படையினரிடமிருந்து அறிக்கையைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ச-5)


2008ல் A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!

காலத்தை விரயமாக்காதீர்... எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்...

எங்குமில்லாத ஓர் அரிய சந்தர்ப்பம்

2008 A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் Pending result அடிப்படையில் சேர்க்கப்படுவார்கள்.

சித்தி எய்த தவறும் பட்சத்தில் 100% கல்வி கட்டணம் மீளளிக்கப்படும்.

DONT MISS THIS GREAT OPPORTUNITY

Courses Offered:

Bachelor of Engineering (BE)
- Electronics & Communication Engineering
- Information Technology
- Electrical & Electronics Engineering - 4Years
- Computer science & Engineering

(Normal tution fees Rs(Ind)1.2 Lakh/Yr, Scholarship Rs(Ind) 0.2Lakh/Yr)

- Civil Engineering
- Mechanical Engineering
- Fashion Technology

(Normal tution fees Rs(Ind)1 Lakh/Yr, Scholarship Rs(Ind) 0.1Lakh/Yr)

விண்ணப்ப முடிவு திகதி 30.08.2008

தவணை அடிப்படையிலான கல்வி கட்டணம்

கல்வி ஆண்டு ஆரம்பம் 15.09.2008

No Sponsor ship, Bank balance, Consultation Charges, No-Ragging

SONA College is rank 27th among more than 2000 Engineering Colleges in INDIA
Sona college rank 5th under the Anna University

2012 MAYல் நீங்களும் ஒரு பொறியியலாளர்

August 28ல் பாடசாலையில் இருந்து விலகும் நீங்கள் இரண்டு வாரத்திலேயே உங்கள் பட்டப்படிப்பை ஆரம்பியுங்கள்.

சொற்ப அளவிலேயே அனுமதிகள் உள்ளதால் எம்மை விரைவாக அணுகுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

A/Lல் 3Cக்கு மேல் பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு கட்டணத்தில் விசேட சலுகை......

Missed the E-facuty! Leave the worries!
SONA - A Perfect place, more than your expectation!

Direct admissions from Sona College

இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட All India Council For Technical Education (AICTE)இனால் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான சான்றிதழ் வழங்கப்பட்ட தமிழ்நாட்டில் உள்ள 04 கல்லூரிகளில் SONAவும் ஒன்று.

LONDON A/L STUDENTS ALSO CAN APPLY

Just make a call at any time to reach us

V4 EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED
E-mail : fnadmission@sonatech.ac.in web : www.sonatech.ac.in

Director-International Admissions, Sona College of Technology, Selam-636005.Tamilnadu,INDIA

நேரடித் தொடர்பு:- The Express Institute

Mr.S.Jeyakanth -TP.0773867257, 0774366711 Mr.T.Elankeethan -TP.0212228374, 0775936343. Email - v4educationalconsultancy@gmail.com


## டீசல்...

கவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு டீசல் மற்றும் ரயர்கள் எடுத்து வருவது குறித்து இலங்கைப் போக்குவரத்தச் சபையின் தலைவருடன் யாழ்.அரச அதிபர் க. கணேஷ் இன்று கலந்துரையாடவுள்ளார். (ச,ஓ-5)


A/L - 2008

28/08 இல் நடைபெறவிருக்கும் பொதுச் சாதாரண பரீட்சை விசேட கருத்தரங்கு

நேரம் 8.30 - 1.30 வரை

DMI - வெள்ளி (22/08)

ஞானோதயா - சனி (23/08)

கிறிஸ்ரல் - ஞாயிறு (24/08)

சுப்றா - வெள்ளி, சனி, ஞாயிறு 3.30-6.00

❖ வழிகாட்டி நூல் உட்பட கட்டணம் 150/= (1613)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.